Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, APRIL 8, 2022

வெள்ளிக்கிழமை ஏப்ரல் 08, 2022 | ஒளி: 07 கதிர்: 277 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

## நீண்ட விடுமுறை

இம்முறை புத்தாண்டுக்கு ஒருவாரத்துக்கு மேல் பலருக்கும் விடுமுறை கிடைக்கின்றது. சொந்த விடுமுறை உட்பட 9 நாள்கள் விடுமுறை எடுக்க முடியும்.

அந்த வகையில், புத்தாண்டுக்கு முதல்வாரத்தில் 9,10 ஆம் திகதிகளில் சனி, ஞாயிறு விடுமுறையில் இருப்பவர்கள், 11,12 ஆம் திகதிகளில் கடமைக்குத் திரும்பியிருக்க வேண்டும். இல்லையேல் சொந்த விடுமுறைகளை எடுக்கவேண்டும்.

அதன்பின்னர், 13,14 திகதிகளில் புத்தாண்டு கொண்டாடப்படுகின்றது. 16, 17 ஆம் திகதிகளில் விடுமுறை. இடையில், 15 ஆம் திகதியும் சொந்த விடுமுறை எடுக்கலாம்.

தொடர்ச்சி P2

# த.மு.கூ ஆர்ப்பாட்டத்தால் பொங்கியது தலவாக்கலை







■ எஸ். கணேசன், பீ. கேதீஸ்

எரிபொருட்கள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, தொடர் மின்வெட்டு, பொருட்கள் விலையேற்றம் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், இந்நிலைமையை உருவாக்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலக வேண்டுமென வலியுறுத்தியும் தமிழ் முற்போக்கு கூட்டணியால், தலவாக்கலையில் நேற்று (07) மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்கள், பிரதித் தலைவர்கள் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். பெருந்திரளான மக்களும் ஆதரவாளர்களும் கலந்து தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர். மக்களின் தலைகளால் தலாவாக்கலை நகரே பொங்கி வழிந்தது எனலாம். அந்தளவுக்கு ஆதரவாளர்கள் திரண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் மற்றும் எதிர்ப்பு கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவும் கலந்துகொண்டார்.

## அஜித் பறக்க தடை



இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தடையுத்தரவு, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் நேற்று (07) பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், எதிர்வரும் 18 ஆம் திகதியன்று, நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு, கப்ராலுக்கு நோட்டீஸ் அனுப்பிவைக்க ப்பட்டுள்ளது. மத்திய மாகாண முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோன் தாக்கல் செய்த தனிப்பட்ட முறைப்பாட்டு மனுவை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுணவெல, இவ்வாறு தடையுத்தரவை பிறப்பித்தார்.

தொடர்ச்சி P2

## சிங்கள இளைஞர், யுவதிகளே வாருங்கள்



■ பா.நிரோஸ்

சிங்கள இளைஞர், யுவதிகளே வாருங்கள்; நாம் அனைவரும் ஒன்றிணைந்து, தமிழர்களுக்கான தீர்வை முன்வைப்போம். அப்போதே நாட்டின் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு கிடைக்கும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கவலையடைந்தார் சபாநாயகர்

நாட்டின் தற்போதைய நிலைமைக்குத் தீர்வு காணும் வகையில், முறையான யோசனைகளை முன்வைக்காமையை இட்டு, கவலையடைந்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, உறுப்பினர்கள் சிலரை பாராட்டினார்.

தொடர்ச்சி P2



## தந்தை, தாய், மகள் பலி

தனமல்வில, உடவலவ வீதியில் மூன்றாம் கட்டை பகுதியில் நேற்று (07) பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய், அவர்களுடைய மகள் உயிரிழந்துள்ளனர். இவர்கள் பதுளைச் சேர்ந்தவர்கள் என அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2

## மீண்டும் மரத்துக்கு தாவிய தௌபீக்

■ நூருல் ஹுதா உமர்



அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம், பசில் ராஜபக்ஷவால் கொண்டுவரப்பட்ட நிதி சம்பந்தப்பட்ட ஒரு பிரேரணை, 2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் வாக்கெடுப்பு போன்றவைகளுக்கு மாத்திரம்தான் நான் ஆதரவை வழங்கியிருந்தேன் என்று தெரிவித்த திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் அரசாங்கத்துக்கு வழங்கிவந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக அறிவித்துள்ளார். ஆனால், இனிவரும் காலங்களில் அரசாங்கத்தால் கொண்டுவர ப்படுகின்ற எந்த பிரேரணைக்கும் ஆதரவாக வாக்களிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளேன். எனது கட்சியின் (ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின்) தீர்மானத்துக்கு கட்டுப்படுவேன்.

தொடர்ச்சி P2

## இலங்கை பிரச்சினை குறித்து ஆலோசனை கேட்டுள்ளேன்



இலங்கையில் நிலவும் பிரச்சினையை கையாள்வது குறித்து ஆலோசனை கேட்டுள்ளதாக நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன் தெரிவித்துள்ளார். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் தொடர்வதால், இலங்கை நம்பமுடியாத அளவிற்கு கொந்தளிப்பான காலகட்டத்தில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## "ஒருவருட சம்பளம் எனக்கு வேண்டாம்"



நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு, ஒவ்வொருவரும் தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென, கேட்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ, தன்னுடைய ஒரு வருடத்துக்கான சம்பளத்தை தரவேண்டாமென கடிதம் கொடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஆடைத் தொழிற்றுறை பாதிக்கப்படும் அபாயம்



இலங்கையின் ஆடைத் தொழில்துறையின் முன்னணி அமைப்பான கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் (JAAF), தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் மற்றும் மின்சார நெருக்கடி காரணமாக தொழிற்றுறையின் செயற்பாடுகளைத் தொடரும் திறன் குறித்து மீண்டும் கவலை தெரிவித்துள்ளது.

"எரிபொருள் தட்டுப்பாடு நமது அன்றாட உற்பத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. டீசல் இல்லாததால் மின்வெட்டு நேரங்களில் ஜெனரேட்டர்களை பயன்படுத்த முடியாமல் உள்ளது. எரிபொருள் பற்றாக்குறை எமது உற்பத்திப் பொருட்களை கொண்டு செல்லும் செயற்பாட்டை பாதிக்கிறது. ஊழியர்களுக்கான போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளன" என கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றத்தின் (JAAF) பொதுச் செயலாளர் யொஹான் லோரன்ஸ் தெரிவித்தார்.

கொவிட்-19 கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதில் இருந்து, கூடுதலான கேள்விகள் இருந்தாலும். அவற்றை ஏப்ரல் விடுமுறைக்கு முன்பாக நிறைவேற்றுவது சவாலாக இருப்பதாக JAAF தெரிவித்துள்ளது. நீண்ட காலமாக நிலவும் மின்வெட்டு மற்றும் டீசல் பற்றாக்குறை போன்ற காரணங்களால் இனி இயங்க முடியாமல் பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோர் (SMEகள்) உட்பட தொழிற்சாலைகள் ஏற்கெனவே மூடப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

BOI நடத்தும் ஏற்றுமதி செயலாக்க வலையங்கள் (Export Processing Zones - EPZ) மின்வெட்டுகளில் இருந்து விலக்கு அளிக்கப்படும் என்று முன்னர் கூறப்பட்டது, ஆனால் அது கடைப்பிடிக்கப்படவில்லை. கடந்த 24 மணிநேரத்தில் EPZகளும் நீண்டநேர மின்வெட்டை அனுபவித்து வருகின்றன.

இலங்கையின் ஆடைத் துறையானது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% பங்களிப்பதோடு, அனைத்து ஏற்றுமதிகளிலும் 40% பங்களிப்பைக் கொண்டுள்ளது.

தொடர்ச்சி P2

## "ஜனாதிபதி முறை, சர்வாதிகார வெறி எங்களுக்கு வேண்டாம்"



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டு, அதனூடாக ஏகாதிபத்திய சர்வாதிகாரம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, 220 இலட்சம் மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய ஜனநாயக ஆட்சி முறையே நாட்டுக்குத் தேவை.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## அஜித் பறக்க தடை



மத்திய வங்கியின் ஆளுநராக செயற்பட்ட காலப்பகுதியில் பொதுமக்களின் பணத்தை முறையற்ற வகையில் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணவர்தன மற்றும் சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர், இந்த முறைப்பாடு தொடர்பில் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

## மீண்டும் மரத்துக்கு தாவிய தௌபீக்



நாட்டில் ஏற்பட்டிருக்கும் விலையேற்றம், எரிபொருள் இல்லாமை, எரிவாயு இல்லாமை, மருந்துகள் தட்டுப்பாடு, அத்தியாவசிப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் பல காரணங்களுக்காக இத்தீர்மானத்தினை எடுத்துள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை பிரச்சினை குறித்து ஆலோசனை கேட்டுள்ளேன்

பெருந்தொற்றால் பொருளாதார சரிவுகள் அதிகரித்துள்ளன. இதன் விளைவாக பணவீக்கம் அதிகரித்து உணவு, எரிபொருள் மற்றும் மருத்துவப் பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார்.

நியூசிலாந்தில் வாழும் இலங்கையர்கள் சிலர் இலங்கையின் தலைமைத்துவத்தை நியூசிலாந்து அரசாங்கம் கண்டிக்க வேண்டும் என வலியுறுத்தி மனுவொன்றில் கையெழுத்திட்டு தந்துள்ளனர்.

இலங்கையின் தலைமைத்துவம் தொடர்பில் மக்களிடம் அதிகரித்து வரும் விரக்தியை தாம் ஒப்புக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

நியூசிலாந்துக்கான வெளியுறவுக் கொள்கைக்கு அமைய, அமைச்சகத்திடம் இருந்து 24 மணிநேரத்தில் கூடுதல் விளக்கத்தை பெற தாம் விரும்புவதாகவும் தெரிவித்துள்ள அவர், இலங்கை அரசியலிலும் உள்நாட்டிலும் கொந்தளிப்பான காலகட்டம் நிலவுகின்றது என்றார்.

# சிங்கள இளைஞர், யுவதிகளே வாருங்கள்



> ஆனால் நாட்டில் 70 வருடக்கால பிரச்சினை அப்படியே இருக்கிறது. நாட்டின் கடன் சுமை தொடர்பில் பேசப்படுகிறது. இந்த கடன்கள் தமிழர்களை அழிப்பதற்காக கடந்தக் காலங்களில் பெறப்பட்டவையே ஆகும்

பாராளுமன்றத்தில் நேற்று (07) நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையிலும் வடக்குக் கிழக்கில் தமிழர்களின் நிலங்களை இராணுவத்தினருக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. நாட்டின் இன்னொரு பகுதியில் மோசமான நிலைமை தொடர்கிறது எனவும் தெரிவித்தார்.

சிங்கள இளைஞர், யுவதிகள் இப்போதுதான் போராடுகிறீர்கள். ஆனால் நாங்கள் 20 வருடங்களுக்கு மேலாக பொருளாதார தடைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வந்திருக்கிறோம். தார்மீக அடிப்படையில் தமிழர் பிரச்சினைகளை சிங்கள் இளைஞர், யுவதிகள் சிந்திக்க வேண்டும் என்றார்.

கைக்குழந்தைகள் கூட விதியில் போராடுகிறார்கள். ஆனால் யுத்தக் காலத்தில் எத்தனை குழந்தைகளை கொன்றார்கள். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பாரியாரிடம் குழந்தைகள் பல ஒப்படைக்கப்பட்டன. ஆனால் அவர்களில் பலர் காணாமல்போயுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பிலும் சிங்கள இளைஞர்கள், யுவதிகள் சிந்திக்க வேண்டும். காஸ், எரிபொருள், மின்சாரம் தீர்ந்துவிட்டால் நாட்டின் பிரச்சினை தீர்ந்துவிடும் என நினைக்கிறார்கள். ஆனால் நாட்டில் 70 வருடக்கால பிரச்சினை அப்படியே இருக்கிறது. நாட்டின் கடன் சுமை தொடர்பில் பேசப்படுகிறது. இந்த கடன்கள் தமிழர்களை அழிப்பதற்காக கடந்தக் காலங்களில் பெறப்பட்டவையே ஆகும் எனவும் தெரிவித்தார்.

## நீண்ட விடுமுறை

இந்நிலையில், எதிர்வரும் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் பொதுவிடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

## கவலையடைந்தார் சபாநாயகர்

பாராளுமன்றம் நேற்று (07) காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து நேற்றைய (நேற்றுமுன்தினம்) நடத்திய விவாதத்தில் கருத்துக்களைத் தெரிவித்த ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நன்றி.

இந்த விவாதத்தில் தற்போதை நெருக்கடிக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பது தொடர்பில் நேர்மறையான கருத்துக்களோ அல்லது தீர்வுகளோ முன்வைக்கப்படாமை கவலைக்குரியதாகும்.

விவாதத்தை ஆரம்பிப்பதற்கு ஒழுங்குப் பத்திரத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கும்போது அதனைக் குழப்பியமை, இரண்டு தடவைகள் சபையை ஒத்திவைக்க நேர்ந்தமை தற்போதைய சூழலில் இடம்பெறக்கூடாத நிகழ்வுகள்.

ஊடகங்களில் பிரசாரம் வழங்கப்படாவிட்டாலும் பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் முன்வைத்த கருத்துக்கள்

> சபையில் வழமைபோன்று அரசியல் குறித்த பிரச்சினையை முன்வைத்தமை கவலையளிக்கிறது. அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேலைத்திட்டமொன்றை முன்வைக்கும் வகையில் செயற்படுமாறு கேட்டுக்கொண்டார்.

மிகவும் முக்கியமானவை. சபை இது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.

நாம் சகலரும் கட்சி பேதங்கள் இன்றி அரசியல் குறிக்கோள்களைப் பின்தள்ளிவைத்துவிட்டு இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென அவ்விருவரும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அத்துடன், சகல உறுப்பினர்களும் சபையில் வழமைபோன்று அரசியல் குறித்த பிரச்சினையை முன்வைத்தமை கவலையளிக்கிறது. அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேலைத்திட்டமொன்றை முன்வைக்கும் வகையில் செயற்படுமாறு கேட்டுக்கொண்டார்.

## "ஜனாதிபதி முறை, சர்வாதிகார வெறி எங்களுக்கு வேண்டாம்"

அதனை மேற்கொள்ள முடியுமான அனைத்தையும் தான் முன்னெடுப்பேன் என்றார்.

அரசாங்கத்தின் பேரழிவு மிக்க ஆட்சிக்கு எதிராக தமிழ் முற்போக்குக் கூட்டணி ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம் தலவாக்கலை நகரில் நேற்று (07) இடம்பெற்றது.

அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன, மத, கட்சி வேறுபாடின்றி வீதிக்கு வந்துள்ள மக்களின் இதயத் துடிப்பை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் எனவும், முற்றிலும் அதனைப் புரிந்து கொள்ள அரசாங்கம் தயாராக இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பாரிய பல பிரச்சினைகளுக்கு மத்தியில் மக்கள் வாழ வேண்டியுள்ளதாகவும், இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டவை என்றார்.

இன, மத, கட்சி பேதங்களைத் தூண்டி மக்களின் எதிர்ப்பை அடக்குவதற்கு யாராவது முயன்றால் அதற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஜனநாயக ரீதியிலான போராட்டத்தில் ஈடுபடும். தோட்டத் தொழிலாளர்களாக துன்பப்படும் மக்களை தோட்ட உரிமையாளர்களாக மாற்றும் கனவை நனவாக்குவதற்கு மேற்கொள்ள முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் தான் மேற்கொள்வேன் என்றார்.

(எஸ்.கணேசன், பீ.கேதீஸ்)

## தந்தை, தாய், மகள் பலி

கெப் ஒன்றுடன் முச்சக்கரவண்டி மோதி விபத்து இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

விபத்துடன் தொடர்புடைய கெப் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். தனமல்வில பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆடைத் தொழிற்துறை பாதிக்கப்படும் அபாயம்

இந்தத் துறையானது 350,000 தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்குகிறது மேலும் மேலும் 700,000 பேர் அதிக விநியோகச் சங்கிலியின் ஒரு பகுதியாக வாழ்வாதார வாய்ப்புகளைப் பெறுகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## "ஒருவருட சம்பளம் எனக்கு வேண்டாம்"

அதற்கான கடிதத்தை பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்கவிடம் கையளித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (06) உரையாற்றிய ஹரின் பெர்னான்டோ, நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு, தன்னுடைய ஒரு வருடத்துக்கான சம்பளத்தை பெறமாட்டேன் என்றும் பாராளுமன்ற உணவகத்தில் உணவு உண்ண மாட்டேன் என்றும் தெரிவித்திருந்தார்.

## "பதவியில் அமர்த்தியவர்களே பாதையில் இறங்கி துரத்தும் கேவலம்"

நாட்டின் ஜனாதிபதியை வீட்டுக்கு போகுமாறு கோரி, பாமரர்களும், படித்தவர்களும் சிறுவர்களும் பெரியோரும் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தும் நிலை ஏற்பட்டுள்ளமை, இந்த நாட்டின் துரதிஷ்டமாகும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

"கோட்ட கோ ஹோம்" என்ற கோஷங்களுடன் திரிகின்ற மிகவும் இழிவான நிலை இந்த நாட்டுக்கு வந்துள்ளது. நமது நாட்டில் எத்தனையோ ஜனாதிபதிகள் பதவி வகித்தனர். ஆனால், அதற்கு மாற்றமாக எந்தவொரு ஜனாதிபதியும் அவமானப்படாத நிலை தற்போதைய ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. இவருக்கு பைத்தியம் என்று கூறுகின்றனர். இவ்வாறான நிலை ஏற்பட்ட பிறகும், இந்த சபையிலே ஒருசில அமைச்சர்கள் "நாங்கள் ஒருபோதும் விலகப் போவதில்லை, ஜனாதிபதியையும் விலக அனுமதிக்க மாட்டோம், அவர் விலகவும் மாட்டார், எதற்கும் முகங்கொடுக்க தயாராக



உள்ளோம்" என்றார்.

பாராளு மன்றத்தில் நேற்று (07) இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் நாட்டின் தலைமைக்கு தகுதி இல்லாதவர் என தேர்தலுக்கு முன்னரேயே நாங்கள் உணர்ந்துகொண்டவர்கள். அதனாலேயே நாம் அவருக்கு எதிராக பிரசாரம் செய்தோம். எனினும், அவருக்கு 69 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. பாராளுமன்றத் தேர்தலிலும் அவரது கட்சி வெற்றியீட்டியது. இவ்வாறு வாக்களித்தவர்கள்தான், இன்று நடு வீதிகளிலும் சந்திகளிலும் அவருக்கும், அவரது அரசுக்கும் எதிராக கோஷமிடுகின்றனர் என்றார்.

இரண்டு வருடகாலம் நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை சிந்தியுங்கள். பதவிக்கு வந்து அவசர அவசரமாக, 20 ஆவது திருத்தத்தை கொண்டுவந்தீர்கள். பாராளுமன்ற அதிகாரத்தை பறித்து தனி நபர்களிடம் ஒப்படைத்தீர்கள். "முஸ்லிம் கட்சிகள் கூடாது, முஸ்லிம் வாக்குகள் கூடாது" எனக் கூறிய நீங்கள், எதிரணியில் வெற்றிபெற்ற முஸ்லிம் எம்.பிக்கள் ஏழு பேரைக் கொண்டு 20வது திருத்தத்தை நிறைவேற்றினீர்கள். அதன்மூலம் கிடைத்த இலாபம் என்ன? பிரதமருக்கு இருந்த அதிகாரத்தை, அவரது தம்பி கோட்டாவுக்கு வழங்கினீர்கள். இவ்வாறன அதிகாரம் தனிநபருக்கு சென்றிருக்காவிட்டால், இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினையை பாராளுமன்றம் பொறுப்பேற்றிருக்க முடியும். பிரதமர் பொறுப்புக் கூறும் நிலை ஏற்பட்டிருக்கும். எனவே, நீங்களாகவே ஏற்படுத்திக்கொண்ட இந்த 20 வது திருத்தம்தான் இந்தப் பிரச்சினையின் மூல வேராகும் என்றார்.

### அவசரகால, ஊரடங்கு சட்டங்கள், சமூக வலைத்தள முடக்கம்
## மனுக்களை விசாரிக்க திகதி குறிப்பு

அவசரகால சட்ட விதிமுறைகளை அமுல்படுத்தியமை, ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தமை, சமூக வலைத்தளங்களுக்கு தடை விதித்தமையை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள 4 அடிப்படை உரிமை மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் நேற்று (07) தீர்மானித்துள்ளது.

அந்த செயற்பாடுகளின் ஊடாக அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கியுள்ளனர்.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, எல்.டி.பீ தெஹிதெனிய, மஹிந்த சமயவர்தன ஆகியோர் முன்னிலையில் இந்த அடிப்படை உரிமை மனுக்கள் பரிசீலிக்கப்பட்டன.

ஊடகவியலாளர்களான ரசிக ஜயக்கொடி, ரோயல் ரெமண்ட் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளரான சஷி வின்சன்ட், மொரட்டுவை நகர சபை உறுப்பினர் லிஹினி பெர்னாண்டோ ஆகியோரால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்களில், ஜனாதிபதி செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு, பொலிஸ் மா அதிபர் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர்கள் சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் மிக நீண்ட விளக்கத்தை மன்றுக்கு சமர்ப்பித்தனர்.



நாடளாவிய ரீதியில் அமுலாகும் வகையில், அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியமை, ஊரடங்கு உத்தரவை பிறப்பித்தமை, 15 மணித்தியாலங்களாக சமூக வலைத்தளங்களை பயன்படுத்த தடை விதித்தமை ஆகியன அடிப்படை உரிமையை மீறும் செயற்பாடுகள் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் உயர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

இது தான்தோன்றித்தனமான செயற்பாடாக காணப்படுவதுடன், பொதுமக்களின் நலனை பாதுகாக்கவே அவசரகால சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதனை தவிர்த்து, தனக்கெதிராக பொதுமக்களின் நிலைப்பாடுகளை ஒடுக்குவதற்கு அவற்றை பயன்படுத்த முடியாதென ஜனாதிபதி சட்டத்தரணி உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

விடயங்களை பரிசீலனை செய்த உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள் குழாம் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில், இந்த அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை ஜூலை மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

# அழைத்து வந்தவர்களே மஹிந்தவை விரட்டுகின்றனர்

நாட்டில் மஹிந்த அலையை உருவாக்கி, மஹிந்தவை ஆட்சிப்பீடம் ஏற்றியவர்களே தற்போது, பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த விலக வேண்டும் எனக் கூறுவதாக பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவியிலிருந்து விலக வேண்டுமெனக் கூறிவிட்டு, யாரை இவர்கள் அழைத்து வரப்பார்க்கிறார்கள். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவையா, அநுரகுமார திஸாநாயக்கவையா, சம்பிக்கவையா? எனவும் கேள்வி எழுப்பினார்.

அல்லது தங்களது மறைமுக நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளவா மஹிந்தவை அவர்கள் விலகச் சொல்கிறார்கள்? உண்மையில் உங்களுக்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்குமாக இருந்தால், அல்லது அரசாங்கம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இழந்ததாக நீங்கள் நினைத்தால் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவாருங்கள்.

ஆளுங்கட்சியினர் சுயாதீனமாகச் செயற்படுவதாகக் கூறினாலும் எவரும் அரசாங்கத்திலிருந்து விலகவில்லை. அவர்கள் எதிர்க்கட்சி ஆசனங்களுக்கு சென்று அமரவில்லை. எவராவது தங்களது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்குவார்களாக இருந்தால், அதனை விட அவர்கள் பதவிகளில் இருந்து விலகுவதே நல்லது எனவும் தெரிவித்தார்.

# ஹர்ஷவுக்கு ஜனாதிபதி பதவியை வழங்க முடியாது

நாட்டு மக்கள் தற்போது முகங்கொடுக்கும் பாரிய பிரச்சினைகளுக்காக முன்னாள் அமைச்சர் என்ற வகையில் தான் பகிரங்கமாக மன்னிப்பு கோருவதாக சபையில் அறிவித்த அலி சப்ரி, தவறுகள் இடம்பெறும்போது அதற்குப் பொறுப்புக்கூறாது பின் கதவு வழியாக ஓடிச் செல்பவர் நானல்ல எனவும் தெரிவித்தார்.



“நாட்டின் பிரச்சினைகளுக்கு ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக்கொண்டிருக்க முடியாது. இதிலிருந்து எவ்வாறு நாட்டை மீட்பது என்பதே இப்போது முக்கியம். நாட்டு மக்கள் தற்போது பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். முன்னாள் அமைச்சர் என்ற வகையில், இதற்காக நான் நாட்டு மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக்கேட்கிறேன் என்றார்.

உள்ளிருந்து நாம் போராடியதாலேயே அவசரக்காலச் சட்டம், சமூக வலைத்தளங்கள் மீதான தடை மீளப் பெறப்பட்டன. எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வாவுக்கு நாம் அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு தயாராக இருக்கிறோம்” என்றார்.

இதேவேளை, ஜனாதிபதி பதவியை ஹர்ச டி சில்வாவுக்கு வழங்குங்கள் என எதிர்க்கட்சியினர் கூறினார். எனினும் ஜனாதிபதி பதவியை ஹர்சவுக்கு வழங்க முடியாது. நீங்கள் வேண்டுமாக இருந்தால் வழங்குங்கள். ஐந்து வருடங்களுக்கு ஜனாதிபதி ஒருவரை நாட்டு மக்கள் தெரிவு செய்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

# “இடைக்கால குழுவை அரசாங்கமாக நியமிப்போம்”

வன்முறைகளை தூண்டி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், தற்போது நாட்டில் வன்முறைகளைத் தூண்ட வேண்டாமென கோருகிறது என தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ‘ஞான அக்கா’வை ஜனாதிபதியே பாதுகாக்கிறார். இது வெட்கத்துக்குரியது எனவும் தெரிவித்தார்.



பொறுப்புக்கூற முடியாத ஜனாதிபதி பதவி விலகிச் செல்ல வேண்டும். வன்முறைகளின் ஊடாகவே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. அம்பாறையில், கருத்தடை கொத்து ரொட்டியில் ஆரம்பித்து, குருநாகலில் கருத்தடை வைத்தியரை உருவாக்கி, வன்முறைகளைத் தூண்டியே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

எனது குடும்ப உறுப்பினர்களும் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். அவர்களும் அவர்களது எதிர்காலத்துக்காகப் போராடுகிறார்கள். இன்னும் ஒருவாரத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாட வேண்டும். ஆனால், நாட்டில் நிதி அமைச்சர் இல்லை.

இடைக்கால குழுவொன்றை அரசாங்கமாக நியமிப்போம். அதற்காக அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வோம். ஜனாதிபதியை பாராளுமன்றத்துக்கு அழைத்துவந்து ஆளுங்கட்சியினர் குதூகலிக்கிறார்கள். நல்லவேளை எதிர்க்கட்சியில் பெரும்பாலானோர் அப்போது பாராளுமன்றத்தில் இருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

# நிறைவேற்று அதிகாரத்தை விரைவில் ஒழிப்போம்

விரைவிலேயே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்கான சட்டமூலம் ஒன்றை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் முன்வைக்கும் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைக்குக் காரணமான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அப்பதவியில் வைத்துக்கொண்டு நாட்டின் பிரச்சினைகளுக்கான தீர்வை கலந்துரையாட முடியாது. தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை உள்ளிட்ட அரசமைப்பில் மாற்றம் செய்ய வேண்டும்.

நாட்டில் காணப்படும் பிரச்சினைகளை பாராளுமன்றமா உருவாக்கியது? நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படும் என சபாநாயகரே கூறியிருக்கிறார். ஜனாதிபதி தான்தோன்றித்தனமான தீர்மானங்களை எடுத்தமையே நாட்டின் தற்போதைய நிலைமைகளுக்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.





பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (06) ஆரம்பமான விவாதம் நேற்றும் (07) தொடர்ந்தது.

# பிரபாகரனை சிங்களவர்களே வலுப்படுத்தினர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் சிறியளவில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தை சிங்களவர்களே வலுப்பெற செய்ததாக முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.



நாட்டு மக்களுக்குப் பிரச்சினை இருக்கிறது. பால்மா, காஸ், எரிபொருளுக்காக வீதிக்கு மக்கள் இறங்கியிருக்கிறார்கள். இதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். வீதிக்கு இறங்கிய மக்கள் எரிபொருள், பால்மா, காஸ் என்பவற்றையே கோரினார்கள். அரசாங்கத்துக்கு அழுத்தங்களை வழங்குவதற்கு நாட்டு மக்களுக்கு அதிகாரம் இருக்கிறது.

அமைதியாக வீதிக்கு இறங்கி போராடும் மக்களின் பின்னால் வன்முறைகளைத் தூண்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதன் பின்னணியிலேயே ஜனாதிபதி வீடு செல்ல வேண்டும், அரசாங்கத்தை வழங்க வேண்டும் என்கிற கோரிக்கைகள் வலுப்பெறுகிறது.

ஆரம்பத்தில் சிறிய போராட்டமாக பிரபாகரன் போராட்டத்தை முன்னெடுத்தார். இதன்போது 13 இராணுவ வீரர்கள் கொலை செய்யப்பட்டனர். அவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு பொரளை கனத்தை பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லும் வழியில் அங்கிருந்த சிலர் எரிபொருள் நிரப்பு நிலையங்களை உடைத்து எரிபொருளை எடுத்து தமிழர்களுக்கு சொந்தமான கடைகளுக்கு தீவைத்தனர்.

இதன்போது ஒட்டுமொத்த தமிழர்களையும் வீதிக்கு தள்ளி அவர்களின் சொத்துகளை அழித்ததோடு மட்டுமல்லாது தமிழர்களை உயிரோடு கொழுத்தி, பிரபாகரன் போராடுவதற்கான பலத்தைப் பெற்றுக்கொடுத்தோம். சிங்களவர்கள், தமிழர்களை கொன்றார்கள் எனச் சர்வதேசம் பேசியது. இதேவேளை போராட்டங்களை ஒருபோதும் நிறுத்த வேண்டாமென அநுரகுமார, சாணக்கியன் ஆகியோர் கூறுகிறார்கள். போராட்டங்களால் உயிரிழப்புகள் ஏற்படும்போது அதற்குப் பொறுப்புக்கூறுபவர்கள் யார்? எனவும் தெரிவித்தார்.

போராட்டங்களுக்கு ஜனாதிபதி ஒருபோதும் இடையூறுகளை ஏற்படுத்தப்போவதில்லை. யுத்தத்தை நிறைவு செய்தவர் என்பதால் ஜனாதிபதி ஹிட்லர் போல செயற்படுவார் என நினைக்கிறார்கள். ஜனாதிபதி ஒருபோதும் அதனை செய்யப்போவதில்லை.

எனினும் அமைதியான முறையில், வேண்டுமென்கிற அளவுக்குப் போராட்டங்களில் ஈடுபடுங்கள். வன்முறைகளில் ஈடுபட வேண்டாம். போராட்டங்களின் போது எவரும் உயிரிழப்பார்களாக இருந்தால் பாராளுமன்றத்தில் உள்ள 225 எம்.பிக்களும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி விலகினால் நாங்கள் ஆதரவு

ஜனாதிபதி பதவி விலகியே ஆக வேண்டும் என்கிற கட்டாய நிபந்தனையின் அடிப்படையில், எந்தவொரு யோசனைகளுக்கும் தேசிய மக்கள் சக்தி இணங்குவதற்கு தயாராகவே இருப்பதாக அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி தெரிவித்தார்.



இதற்கு முன்னரும் 2001ஆம் ஆண்டு அப்போதிருந்த அரசாங்கத்துக்கு நிபந்தனைகள் அடிப்படையில் ஆதரவை வழங்கியிருந்தோம். அவ்வாறு செய்வதற்கு நாம் எப்போதும் தயாராகவே இருக்கிறோம். ஆனால் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்கிற கட்டாய நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே நாம் ஆதரவளிக்க தயாராக இருக்கிறோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்துகொண்டு முன்வைக்கும் எந்தவொரு யோசனைகளாலும் மக்கள் போராட்டம் நிற்காது. இப்போராட்டங்கள் வன்முறைக்கு செல்லக்கூடாது என்பதில் அனைவருக்கும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் மக்கள் தங்களது நாளாந்த வாழ்வில் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்றே மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் மக்களின் வேதனைகளை புரிந்துகொண்டு மக்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வை வழங்க தவறியிருந்தது. மின்துண்டிக்கப்படாது, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது, எம்மால் இந்த பிரச்சினை உருவாக்கப்பட்டதல்ல போன்ற கருத்துகளையே அரசாங்கம் கூறிவந்தது என்றார்.

மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வை வழங்கவில்லை என்பதாலேயே மக்கள் ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி போராட ஆரம்பித்தினர். இதன் பின்னர் பாராளுமன்றம் கூடியபோது ஆளுங்கட்சியின் பங்காளிகள் பலர் சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்தனர். இதனால் பிரச்சினை மேலும் அதிகரித்து.

மக்களின் போராட்டத்துக்கு பிரதான இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது ஜனாதிபதி பதவி விலகி செல்ல வேண்டும் என மக்கள் கூறுகிறார்கள். இது மக்களின் நியாயமான கோரிக்கை. இரண்டாவது சாதாரணமான தங்களது வாழ்க்கையை முன்னெடுத்து செல்வதற்கான சூழலை மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்பதாகும்.

ஒரே இரவில் ஒட்டுமொத்த அமைச்சரவையும் விலகியிருப்பது இந்த அரசாங்கத்திலேயே. இதுபோன்ற நாடகங்களால் மக்களின் போராட்டங்கள் நிறைவடைவதில்லை எனவும் தெரிவித்தார்.

# ஜனாதிபதியை குறை சொல்லாதீர்கள்



நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதியே காரணமென கூற முடியாதென தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க, எரிபொருள், காஸ்களுக்கான வரிசைகள் முடிவுக்கு வரும் எனவும் தெரிவித்தார்.

ஏப்ரல் மாத்துக்கு தேவையான எரிபொருள், காஸ் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்காலத்தில் எரிபொருளுக்கும் காஸூக்கும் நாட்டில் காணப்படும் வரிசைகளுக்கு முடிவுக்கட்ட முடியும். அதேபோல எதிர்வரும் நாள்களில் மின்துண்டிப்பும் இருக்காது எனவும் தெரிவித்தார்.

# மலையக மக்களை வைத்து சஜித் தேர்தல் பிரசாரம்

தங்களது பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்காக, தலவாக்கலைப் போராட்டத்துக்கு வந்திருந்த மலையக மக்களை வைத்து, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தேர்தல் பிரசாரம் செய்து வருவதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.



தலவாக்கலையில் போராட்டம் ஒன்று நடைபெறுகிறது. இது போராட்டமா? இல்லை கட்சிக் கூட்டமா என்பது தெரியவில்லை எனவும் ஜீவன் தொண்டமான் இதன்போது கூறியதோடு, இந்த ஆர்ப்பாட்டத்துக்கு வந்தவர்கள் அனைவரும் அரசியல்வாதிகளையோ, அரசியல் கட்சிகளையோ நம்பி வரவில்லை எனவும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் விவாதமே இங்கு நடைபெற வேண்டும். எனினும் இதற்கு மாறாக இங்கு ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக்கொண்டிருக்கிறார்கள்.

எவ்வாறாயினும் நாட்டின் தற்போதைய நிலைமைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்பது மக்களுக்கு நன்றாக தெரியும்.

எனவே இதற்கான தீர்வைக் காண்பதுதான் இப்போது முக்கியம். எனினும் சபையில் தேவையில்லாத விடயங்களே பேசப்படுகிறது. ‘கோ ஹோம் கோட்டா’ எனக் கூறுபவர்கள் ராஜபக்ஷர்களையும் அல்லது ஜனாதிபதியை மாத்திரம் பதவி விலக வேண்டுமென கூறவில்லை. மாறாக, ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்றே கூறுகிறார்கள். ஆகையால், அனைவரும் தங்களது கடமைகளை செய்ய தவறியுள்ளோம்.

எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்கிற பேதங்களுக்கு அப்பால் அனைவரும் ஒன்றிணைந்து நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வைக்காண முன்வர வேண்டும் என்றார்.

# பச்சை பச்சையாக ஏமாற்றிவிட்டனர்



மலையக மக்களை அரசாங்கமும், கம்பனிகளும் நாடகமாடி பச்சை பச்சையாக ஏமாற்றியுள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

மலையக மக்களை வீதிக்கு இறக்கியுள்ளது. வீடும் இல்லை வீதியும் இல்லை. நாட்டில் தொழில் அமைச்சர் இல்லை. நிதி அமைச்சர் இல்லை. என்ன அரசாங்கம் நடத்திக்கொண்டு இருக்கிறீர்கள்? இது அரசாங்கமா? எனவும் ஆக்கிரோசமாக உரையாற்றினார்.

இதன்போது பாராளுமன்றத்துக்குப் பொருத்தமற்ற வசனங்களை சபையில் பேச வேண்டாமென சபைக்கு தலைமைத்தாங்கிக் கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் அறிவுறுத்தினார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்பட்டுள்ளது. ஆனால், பதுளை மாவட்டக்குழு கூட்டத்தில் பதுளையில் எங்கு இராணுவ முகாம் அமைக்கலாம் என்பது தொடர்பில் பேசப்படுகிறது. மலையக மக்களின் சாபத்துக்கே தற்போதைய அரசாங்கம் முகங்கொடுத்து வருகிறது.

# வீதிகளில் இறக்கி கொலை செய்யாதீர்



நாட்டின் இளம் தலைமுறையினரை வீதிக்கு இறக்கி அவர்களை கொலை செய்ய வேண்டாமென இரு கரங்களைக் கூப்பி அநுர குமாரவிடம் வேண்டுகோள் விடுத்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, கொலைக்கார யுகத்துக்கு நாட்டை அழைத்து செல்ல வேண்டாமெனவும் கோரிக்கை விடுத்தார்.

தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்றால் தேர்தலுக்கு செல்வோம். ஒன்றிணைந்து நாட்டு மக்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுப்போம் எனவும் இதன்போது ஜோன்ஸ்டன் கூறினார்.

இரத்தத்தைப் பார்க்கவே அநுர விரும்புகிறார். எரிபொருள், காஸ்க்கு மக்கள் வரிசைகளில் நிற்பதைப் பார்த்து தேசிய மக்கள் சக்தி மகிழ்ச்சிகொள்கிறது. மிரிஹானயில் உள்ள ஜனாதிபதி இல்லத்துக்கு முன்பாக இடம்பெற்ற போராட்டம் வன்முறையாக மாறியமைக்கு தேசிய மக்கள் சக்தியே காரணம் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என கூறுகிறீர்கள். ஜனாதிபதி பதவி விலக மாட்டார் என்பதை மீண்டும் நினைவுப்படுத்துகிறோம். திரைமறைவில் நீங்கள் முன்னெடுக்கும் விளையாட்டுக்களுக்கு முகங்கொடுக்க நாம் தயார் எனவும் தெரிவித்தார்.

முதலாவது ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என கூறும் அநுரவுக்கு இரண்டாவதாகவே நாட்டின் பிரச்சினைகள் நினைவுக்கு வருகிறது. பால்மா, காஸ், எரிபொருள் போன்ற பிரச்சினைகளை அனைவரும் ஒன்றிணைந்து தீர்ப்போம். இதனை அரசாங்கத்தால் தீர்க்க முடியும் என நாம் நம்புகிறோம்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உலக முழுவதும் அதிகரித்தள்ளன. ஏனைய நாடுகளிலும் எரிபொருளுக்கு வரிசைகைள் இருக்கின்றன. எதிர்க்கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்காகவே அமைச்சரவை ஒட்டுமொத்தமாக பதவி விலகியிருந்தது.

69 இலட்ச மக்கள் ஜனாதிபதிக்கு வாக்களித்து 5 வருடங்கள் ஆட்சி செய்ய வேண்டுமென அதிகாரம் வழங்கியிருக்கிறார்கள். இதனை மீறும் வகையில் அரசமைப்புக்கு வெளியில் செயற்பட நாம் ஒருபோதும் தயாராக இல்லை. எங்களை முட்டாள்கள் என அநுரகுமார திஸாநாயக்க நினைக்க வேண்டாம். நாட்டில் பேரழிவுகளை ஜே.வி.பியே ஏற்படுத்தியது. இதனையே மீண்டும் செய்யப் பார்க்கிறது எனவும் தெரிவித்தார்.

அறிவித்தல்



(தே.அ.அ.இல. 19880760195l) ஐ கொண்ட
**மொஹம்மட் சீகாவ் நிலாம்டீன்**
என்பவர் எமது நிறுவனமான
**“வை – என்டர்டெய்மெண்ட்”** இருந்து
**22.02.2022** ஆம் திகதி முதல் எமது
நிறுவனத்தில் சேவையில் இல்லை
என்பதுடன் தயவு செய்து இவருடன்
எங்கள் நிறுவனத்தின் பெயரிலோ
அல்லது பங்குதாரர் வங்கியிலோ எந்த
வியாபாரத்திலும் ஈடுபட வேண்டாம்
என்பதனை இதன் மூலம்
தெரிவித்துக்கொள்கிறோம்

எல்லைக்கல் நடுவதை நிறுத்தும்

# தீர்மானத்தை மீறுகின்றனர்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவள பாதுகாப்புத் திணைக்களத்தால் காணிகள் எல்லைப்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்படும் எல்லைக்கல் நடுவதை நிறுத்தி வைப்பதாக தீர்மானம் எட்டப்பட்ட போதும், அதன் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்டச் செயலாளர் க.விமலநாதனின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான காதர் மஸ்தான் ஆகியோரின் இணைத்தலைமையில் மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.




இதன்போதே, மேற்படி தீர்மானம் எட்டப்பட்டிருந்தது. எனினும், தற்போது எல்லைக்கல் இடும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பகுதிகளில் ஒதுக்கப்பட்ட வனப் பிரதேசங்களாக எல்லையிடப்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக, யுத்தகாலத்தில் கைவிடப்பட்ட பயிர்ச்செய்கை நிலங்கள் அதிகளவில் இவ்வாறு எல்லையிடப்பட்டு உள்ளதாகவும் தொடர்ந்தும் எல்லையிடப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அத்துடன், மாந்தைகிழக்கு பிரதேசத்தில் வனவளத் திணைக்கள அதிகாரிகள், பொலிஸார் குறிப்பிட்ட சில கிராம அலுவலர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் பெருந்தொகையான காடுகள் அழிக்கப்பட்டு, காணிகள் ஆக்கிரமிக்கப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாந்தை கிழக்கில் 3,000க்கும் மேற்பட்டவர்கள் பயிர்ச்செய்கை காணிகளின்றியும் தொழில் வாய்ப்பின்றியும் வாழும் நிலையில், வனவளத் திணைக்களத்தால் இவ்வாறு முன்மொழியப்பட்ட வனப் பிரதேசங்கள் என்ற பெயர் பலகைகள் இடப்பட்டுள்ளன.

# ‘20’க்கு ஆதரவு மொட்டுக்கு ‘நோ’

எம்.முபாரக்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கமாட்டேன் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தெரிவித்தார்.

“20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்கள் தொடர்ந்தும் பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவார்களா” எனக் கேட்டு, சமூக செயற்பாட்டாளர் ஒருவர் பேஸ்புக்கில் பதிவொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதற்கு பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் பதில் வழங்கிய போதே, “நான் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கமாட்டேன்” எனக் குறிப்பிட்டார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தீர்மானத்தையும் மீறி 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கிய பின்னர், எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு ஆளும் கட்சிக்கு இவர் ஆதரவு வழங்கி வந்தார்.



இந்த நிலையிலேயே, குறித்த அறிவிப்பை விடுத்த இவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் (06) இரவு நடைபெற்ற அரச தரப்பு பாராளுமன்றக் கூட்டத்திலும் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.







# சட்டத்தரணிகள் போராட்டம்

நாட்டின் பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு, நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வரும் போராட்டத்தின் ஒரு பகுதியாக கந்தளாய் சட்டத்தரணிகள் சங்கத்தினரால், நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்று (07) போராட்ட பேரணி முன்னெடுக்கப்பட்டது. ‘இனவாதத்தால் நாட்டை நாசமாக்கியது போதும்’, ‘எமது சிறார்களுக்காய் இலங்கையை பாதுகாப்போம்’, ‘லோன், லீசிங் செலுத்த முடியாது; நிவாரணம் வழங்கு’, ‘74 வருட அரசியல் சாபத்தை முடிவுக்கு கொண்டு வருவோம்’ போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். பின்னர், பிரதான வீதி வரை பேரணியாக வந்து, தங்களது ஆதங்கங்களையும் அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களையும் சட்டத்தரணிகள் எழுப்பினர். (படங்கள்: ஹஸ்பர்)



சமூக உறவைக் கட்டியெழுப்ப

# மதத் தலைவர்கள் முன்வர வேண்டும்

எம்.எஸ்.எம். ஹனீபா

இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கும் சமூக உறவை கட்டியெழுப்புவதற்கும் மதத் தலைவர்கள் முன்வர வேண்டுமென, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம். சதாத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில், வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதில் சிவில் பாதுகாப்பு உயர் மட்ட ஆலோசனைக் குழுவின் திறன்களை விருத்தி செய்வதற்கான செயலமர்வு, அக்கரைப்பற்று மெங்கோ காடன் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (06) நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், “சகல சமூகங்களும் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையுமே விரும்புகின்றன. ஒவ்வொரு சமூகத்தவர்களும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்த்திருக்கின்ற நிலையான சமாதானத்தை அடைய முடியும்.

“புகைத்தல், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகவுள்ள மக்களை அதிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.






# சங்கானையில் போராட்டம்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து, யாழ்ப்பாணம், சங்கானை பிரதேச செயலகம் முன்பாக நேற்று (07) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
சங்கானை பிரதேச இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படங்கள்: எம். றொசாந்த்)

மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு

# மகிழ்ச்சியான செய்தி



கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கிளிநொச்சி பொதுச் சந்தையில், தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனையாளர்களுக்கு வழங்கும் போது, மரக்கறி உற்பத்தியாளர்கள் 10க்கு 1 (10:1) என்கிற சதவீதத்தில் கழிவு வழங்க வேண்டும். எனினும், நாளை சனிக்கிழமைக்கு (09) பின்னர் இதை வழங்கவேண்டிய தேவை கிடையாது என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் பிரச்சினை, உரப் பிரச்சினைகளுக்கு மத்தியில் உற்பத்தியாளர்கள் அரும்பாடுபட்டு தமது உற்பத்திப் பொருட்களைக் கொண்டு வந்து பொதுச் சந்தையில் விற்கின்றனர்.

இதன்போது கொள்வனவாளர்களுக்கு 10:1 எனும் கழிவு வீதத்தில் வழங்கும் போது, உற்பத்தியாளர்களுக்கு ஏற்படுகிற நட்டம் தொடர்பில், கிளிநொச்சி சேவைச் சந்தையின் நிர்வாகத்தினருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, புது வருடத்தையொட்டி மரக்கறி உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை விகித கழிவு இன்றி சந்தையில் விற்பனை செய்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்றார்.

# நீரைச் சிக்கனமாக பயன்படுத்துங்கள்

சண்முகம் தவசீலன்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து மக்களின் நாளாந்த தேவைக்கு ஏற்ற அளவில் நீரை சுத்திகரித்து விநியோகிக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

மேற்படி மாவட்டங்களில் இனிவரும் நாள்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட உள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின்




கிளிநொச்சி, முல்லைத்தீவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை கருத்திற்கொண்டு, நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

பாவனையாளர் அதிகார சபையால்

# இரகசியம் பேணப்படும்

சண்முகம் தவசீலன்

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, முல்லைத்தீவு மக்களுக்கு முக்கிய அறிவிப்பை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை, பொதுமக்களுக்கு இயன்றளவு சேவையை வழங்க காத்திருப்பதோடு, பொதுமக்களிடமிருந்து பெறுமதியான முறைப்பாடுகளை எதிர்பார்க்கின்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 021 2290266 தொலைபேசி




அழைப்பினூடாக தங்களது முறைப்பாட்டை மேற்கொள்ள முடியும் என அறிவித்துள்ளது.

மக்கள் வழங்கும் முறைப்பாடுகள் தொடர்பில் இரகசியத்தன்மை பேணப்பட்டு, அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவில்

# கடந்தாண்டு 1,770 வேலைத்திட்டங்கள்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்தாண்டு 652.9 மில்லியன் ரூபாய் செலவில் 1,770 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வெலிஓயா, கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் 700 மில்லியன் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, முதலாம் காலாண்டுக்கு 143 மில்லியன் ரூபாய் நிதிக்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுர்வேத வைத்தியசாலை

# மீண்டும் மக்களிடம் கையளிப்பு

எம்.எஸ்.எம். ஹனீபா

அட்டாளைச்சேனை ஆயுர்வேத தள வைத்தியசாலை மீண்டும் பொதுமக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், நேற்று (07) தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்துக் காணப்பட்ட காலப்பகுதியில், கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் பொருட்டு, அட்டாளைச்சேனை ஆயுர்வேத தள வைத்தியசாலை, கொவிட்-19 தொற்று சிகிச்சை நிலையமாக 2021ஆம் ஆண்டு ஜூன் 21ஆம் திகதி மாற்றப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில், தற்போது கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால், இவ் வைத்தியசாலையை மக்களின் பாவனைக்காக விடுவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இனி இவ் வைத்தியசாலையில் வழமைபோன்று வெளிநோயாளர் பிரிவு, நோயாளர் விடுதி, கிளினிக் சிகிச்சைகள் நடைபெறுமென தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை ஆயுர்வேத தள வைத்தியசாலை தற்காலிகமாக நிர்வாக கட்டடத்தில் இயங்கி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண

# தாதியர் நியமனம்

ஹஸ்பர்

கிழக்கு மாகாண சபைக்கு சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட உயிரியல் பொறியியலாளர்கள் மற்றும் தாதியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு, கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அநுராதா யஹம்பத் தலைமையில், திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (06) நடைபெற்றது.

25 தாதியர்கள், உயிரியல் பொறியாளர்கள் இருவர், ஆளுநரால் நியமிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் ஆளுநர் உரையாற்றுகையில், “நாட்டுக்கும், சமுதாயத்துக்கும் சேவை செய்ய அனைவரும் உறுதியுடன் இருக்க வேண்டும். இலவசக் கல்வியால் வழங்கப்படும் இந்த



நியமனத்தை ஒரு வேலையாக மட்டும் கருதக் கூடாது” என்றார்.

மாகாண பிரதம செயலாளர் துசித பீ.வணிகசிங்க, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. முரளிதரன், மாகாண கல்விச் செயலாளர் எச்.இ.எம். டபிள்யூ.ஜி.திஸாநாயக்க, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எம்.கோபாலரட்ணம், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஏ.ஆர். எம்.தௌபீக் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

விவசாயிகளுக்கு

# விதை நெல் வழங்கிவைப்பு



வ.சக்தி

சிறுபோக வேளாண்மைச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு, கிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமைய, விவசாயிகளுக்கு அரைமானியத் திட்டத்தின் கீழ் பாரம்பரிய இனத்தைச் சேர்ந்த விதைநெல் வழங்கி வைக்கும் நிகழ்வு, நேற்று (07) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாலையடிவட்டை விவசாய போதனாசிரியர் பிரிவின் கீழுள்ள 40 ஏக்கருக்குரிய விதைநெல், இதன்போது விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அப்பகுதி விவசாயப் போதனாசிரியர் ரி.கோபி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் வி.பேரின்பராசா, உதவி விசாயப் பணிப்பாளர் த.மேகராசா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு, விவசாயிகளுக்கு விதை நெல்லைப் பகிர்ந்தளித்தனர்.

# காலச் சக்கரம் கருணை காட்டாது

■ எஸ்.கணேசன்

மக்கள் எழுச்சியால் சர்வாதிகாரிகளின் சாம்ராஜ்ஜியங்கள் கூடச் சரிந்துள்ளன. காலச் சக்கரம் என்பது, அநீதி இழைப்பவர்களுக்கு கருணை காட்டாது. தற்போது மக்களும் கொதித்தெழுந்துள்ளனர். எனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் விரைவில் கவிழும் என்று, மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வீ. இராதாகிருஷ்ணன் எம்.பி சூளுரைத்தார்.




இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

“மக்கள் சக்திக்கு முன்னால், அரசியல் சக்தியால் நிற்க முடியாது. நிச்சயம் மண்டியிட்டாக வேண்டும். இதுவே வரலாறு எமக்குக் கற்றுத் தந்துள்ள பாடம். சர்வாதிகாரிகளான சதாம் உசைன், முகாபே போன்றவர்களின் சாம்ராஜ்ஜியங்கள்கூட மக்கள் எழுச்சியால் சரிந்தன. அதேபோல, அநீதிகள் தலைவிரித்தாடும்போது காலச் சக்கரமும் கைகட்டி வேடிக்கை பார்க்காது. அது தனக்கே உரிய பாணியில் வேலையை காட்டும்.

அந்தவகையில், ராஜபக்ஷர்களை தலையில் தூக்கி வைத்து ஆனந்தக் கூத்தாடியவர்கள்கூட, ராஜபக்ஷர்கள் வீடு செல்ல வேண்டும் என வலியுறுத்தி, பொங்கியெழுந்து போராடுகின்றனர். எமது மக்களும் வீதிக்கு இறங்கிவிட்டனர். இதனை நாம் நாட்டை மீட்பதற்கான சுதந்திர போராட்டமாகவே கருதுகின்றோம். எனவே, இன, மத, பேதமின்றி அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து, தற்போது போலவே தொடர்ந்தும் போராட வேண்டும்” என்றார்.

# வாபஸ் பெற்றவர்கள் பல்டி அடிப்பர்

■ எஸ்.கணேசன்

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டுவந்தவர்கள் கூட ‘கோ ஹோம் கோட்டா’ என இன்று கோஷம் எழுப்புகின்றனர். எனவே, அராஜக ஆட்சியை முன்னெடுக்காமல், ஜனாதிபதி உடன் பதவி விலக வேண்டும்” என்று தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் வலியுறுத்தினார்.



மக்கள் கொந்தளிப்புக்கு அஞ்சி மலையகத்தில் உள்ள, கொள்கையற்ற அரசியல்வாதிகள்கூட அரசாங்கத்துக்கான ஆதரவை இன்று வாபஸ்பெற்றுள்ளனர். அவர்கள் மக்கள் பக்கம் நின்று இந்த முடிவை எடுக்கவில்லை. மாறாக, அரசியல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர். இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாளையே அமைச்சு பதவி கிடைத்துவிட்டால், மக்களை படுகுழிக்குள் தள்ளிவிட்டு ‘பல்டி’ அடித்துவிடுவார்கள். எனவே, இந்த ஜனாதிபதி, அரசாங்கம் வீடு செல்லும்வரை போராடுங்கள். நாம் உங்களுக்குத் துணையாக நிற்போம்” என்றார்.

> **“ ஜனாதிபதி, அரசாங்கம் வீடு செல்லும்வரை போராடுங்கள். நாம் உங்களுக்குத் துணையாக நிற்போம். ‘கோட்டா வீட்டுக்கு செல்ல வேண்டும்’ என்ற, மக்கள் கோரிக்கைக்கு மதிப்பளிக்காமல் ஆட்சியை முன்னெடுக்கின்றனர்**

தலவாக்கலையில் அரசாங்கத்துக்கு எதிராக நேற்று (07 நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும்போது கூறியதாவது:

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், இந்த அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி, நாட்டு மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடிவருகின்றனர். மலையகத்திலும் போராட்டங்கள் வெடித்துள்ளன. இந்நாட்டின் பொருளாதாரத்தை தோளில் சுமந்து மீட்டெடுத்த பெருந்தோட்டத் தொழிலாளர்களும், இந்த அராஜக ஆட்சியாளர்களிடமிருந்து நாட்டை மீட்பதற்காக வீதியில் இறங்கிவிட்டனர்.

நாட்டில் எல்லா பகுதிகளிலும் அரச எதிர்ப்பு அலையே வீசுகின்றது. கோட்டாவை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்குப் பெரும்பாடு பட்டவர்களும், அணிதிரண்டு வாக்களித்தவர்களும், ‘கோட்டா வீட்டுக்கு செல்ல வேண்டும்’ என்பதை திட்டவட்டமாக இடித்துரைத்து வருகின்றனர். ஆனால், மக்கள் கோரிக்கைக்கு மதிப்பளிக்காமல் ஜனாதிபதியும் ஆட்சியாளர்களும் அராஜக ஆட்சியை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்” என்றார்.

## குழப்பியவர்களுக்கு

# எதிராக அதிரடியாக நடவடிக்கை எடுக்கவும்

### இல்லையேல் வீதிக்கு இறங்குவோம்

■ பி.கேதீஸ்



நுவரெலியா, கிரகரி வாவிக் கரையில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற நுவரெலியா ஏப்ரல் வசந்த கால நிகழ்வு ஆரம்ப வைபவத்தில், பலாத்காரமாக நுழைந்து, குழப்பத்தை ஏற்படுத்தி, இடையூறு செய்த குழுவினருக்கு எதிராக, சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என நுவரெலியா மாநகர மேயர் சந்தனலால் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

மிக விரைவில் நுவரெலியா பொலிஸார் நடவடிக்கை எடுக்காவிட்டால், நுவரெலியா மாநகர சபை உறுப்பினர்கள் மாநகர சபை ஊழியர்களுடன் இணைந்து, வீதியில் இறங்கி போராட்டம் நடத்துவோம் எனவும் எச்சரித்தார்.

மாநகர சபை கேட்போர் கூடத்தில், நடைபெற்ற நுவரெலியா மாதாந்த பொது கூட்டத்திலேயே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அங்கு மாநகர மேயர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

நுவரெலியா, நகரம் ஒரு சுற்றுலா நகரம். இங்கு அதிகமானோர் சுற்றுலாத்துறையை நம்பியே வாழ்கின்றனர். அதிலும், வருடம் தோறும் ஏப்ரல் மாதத்திலே அதிக வருமானம் தேடும் காலமாகும். ஏப்ரல் மாதத்தில் பெருந் தொகையான சுற்றுலா பயணிகள் நுவரெலியாவுக்கு வருகை தரும் பொழுது, இங்குள்ள சுற்றுலா விடுதிகள், ஹோட்டல்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களும் பழங்கள்,மரக்கறி வியாபாரிகளும் வாடகை வாகன உரிமையாளர்களும் நகர வர்த்தகர்களும் வருமானம் தேடும் மாதமாகும்.

நுவரெலியாவுக்க வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்காக, பொழுபோக்கிற்காக இங்கு பல கலை, கலாசார விளையாட்டுப் போட்டிகள், குதிரைப்பந்தய போட்டி, காரோட்டப்போட்டி, மலர் கண்காட்சி போட்டி ஆகியவற்றை நடத்வதற்கான ஏற்பாடுகளை நுவரெலியா மாநகர சபையினர் செய்துள்ளனர். இதனை குழப்பியது, நுவரெலியா சுற்றுலாத்துறையினரின் வயிற்றில் அடிக்கும் மிலேச்சத்தனமான செயலாகும். இதுவரையிலும் இவ்வாறான சம்பவம் நடைபெறவில்லை. இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது, பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

## டீசல் பவுசரை வழிமறித்த

# இருவருக்கு விளக்கமறியல்

■ ரஞ்சித் ராஜபக்ஸ



எரிபொருள் ஏற்றிச் சென்ற பவுசரை தொடர்ந்து செல்லவிடாமல், வீதியின் குறுக்கே லொறியொன்றை நிறுத்தி, போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், இச்சம்பவத்தில் 40, 42 வயதான நபர்கள் கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் (6) ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். இதையடுத்து அவர்களை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் இருவரும் எரிபொருள் ஏற்றிச் சென்ற பவுசரை, ஹட்டன்- மஸ்கெலியா பிரதான வீதியில் நோர்வூட் பகுதியில் வீதியின் குறுக்காக டிப்பர் வாகனத்தை நிறுத்தி வழிமறித்துள்ளனர்.

இதன்போது, கொட்டகலை எரிபொருள் கூட்டுதாபனத்திலிருந்து 6,000 லீற்றர் டீசல், மஸ்கெலியா பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட டீசலை நோர்வூட் நகரிலுள்ள எரிபொருள் நிலையத்துக்கு வழங்கினால் வீதிக்கு குறுக்காக நிறுத்தப்பட்டுள்ள லொறியை அப்புறப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர். இதனையடுத்தே மதுபோதையில் இருந்த சந்தேகநபர்கள் நோர்வூட் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஹட்டனிலுள்ள தனியார் பஸ்களுக்கு

# கரம் கொடுத்த இ.போ.ச டிப்போ

■ சுதத்.எச்.எம்.ஹேவா



ஹட்டன் பஸ் தரிப்பிடத்திலிருந்து குறுகிய தூர சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள், சுற்றுலா பயணிகளை ஏற்றிச் செல்லும் வான்களுக்கு ஹட்டன் டிப்போ மூலம் டீசல் விநியோகிக்கப்பட்டது.

ஹட்டனில் தொடர்ந்து காணப்படும் டீசல் தட்டுப்பாடு காரணமாக தனியார் பஸ்கள் பல சேவையில் இருந்து விலகிக்கொண்டுள்ளன.

இந்த நிலையில், ஹட்டன் தனியார் பஸ் தரிப்பிடத்துக்கு பொறுப்பான அநுராத சில்வாவுக்கும் ஹட்டன் டிப்போ பொதுமுகாமையாளர் ஜானக கீர்த்திரத்னவுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஹட்டனிலிருந்து குறுகிய தூர சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு டீசல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த டிப்போ முகாமையாளர், குறித்த தனியார் பஸ்களுக்கு 30 லீற்றர் டீசலும் சுற்றுலா வான்களுக்கு 20 லீற்றர் டீசலும் டிப்போவால் வழங்கப்படுகிறது என்றார்.

அத்துடன் தினமும் 10 பஸ்களுக்கு மாத்திரமே இவ்வாறு வழங்கப்படுவதுடன், டீசல் வழங்கப்படும் தனியார் பஸ்களுக்க, ஹட்டன் தனியார் பஸ் தரிப்பிட அலுவலகம் மூலம் கடிதம் விநியோகிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# இராகலை நகரில் திடீர் சோதனை

■ ஆ.ரமேஸ்

இராகலை நகரில் நேற்றுமுன்தினம் (06) காலை தொடக்கம் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர். இராகலை பொதுச் சுகாதார பணிப்பாளர் வைத்தியர் எஸ். கோபிராஜ் தலைமையிலான, பொது பரிசோதனை அதிகாரிகள், இந்தச் சோதனை நடவடிக்கையில் ஈடுப்பட்டனர். இதன்போது நகரிலுள்ள ஹோட்டல்கள், பலசரக்கு கடைகள், சதொச, பல்பொருள் அங்காடி விற்பனை நிலையங்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன் பல வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு, இதன்போது எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

> **“ நகரிலுள்ள ஹோட்டல்கள், பலசரக்கு கடைகள், சதொச, பல்பொருள் அங்காடி விற்பனை நிலையங்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன் பல வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு, இதன்போது எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டது**



# மலையகத்தில் தொடரும் ஆர்ப்பாட்டங்கள்















அரசாங்கத்துக்கு எதிராகவும் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நேற்றும் (7) மலையக நகரங்கள் பலவற்றில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதில் தலவாக்கலையில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். அத்துடன் நாவலப்பிட்டி, பதுளை, ஹட்டன், தெரணியகல, எட்டியாந்தோட்டை உள்ளிட்ட பல நகரங்களிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (மலையக நிருபர்கள்)

# நாடு முழுவதும் போராட்டங்கள்; வடக்கில் சூட்சுமமான சூறையாடல்

மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய தார்மீக கடமை அரசாங்கத்தினுடையது. அந்தக் கடமையைச் செய்யத் தவறும் போதுதான், மக்கள் போராட்டங்கள் வெடிக்கின்றன. எமது நாடு பல்வேறான போராட்டங்களைக் கண்டிருக்கின்றது. சில போராட்டங்கள் வெற்றியளித்துள்ளன. பல போராட்டங்கள் நசுக்கப்பட்டுள்ளன.

ஆட்சிப்பீடமேறிய மிகக் குறுகிய காலத்திலேயே, இவ்வாறான மக்கள் போராட்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கனவிலும் நினைத்திருக்காது. அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

. கடந்த ஒருவாரத்துக்கு மேலாக, மக்கள் வீதிகளில் நிற்கின்றனர். போராட்டங்களின் வேகமும் வீரியமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அதேபோல, போராட்டங்களின் தொனிப்பொருளும், நாளுக்கு நாள் மாறிக்கொண்டே செல்கின்றது.

"அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறை", "எரிபொருட்கள், சமையல் எரிவாயுவைத் தா" என்று ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள், "கோ ஹோம் கோட்டா" என வலியுறுத்தும் அளவுக்குச் சென்றுவிட்டன.

அது படிப்படியாக வளர்ந்து, 225 எம்.பிக்களும் வெளியேற வேண்டும் என்ற அளவுக்கு வியாபித்துவிட்டது. போராட்டத்தின் தொனிப்பொருள் மாறிக்கொண்டே செல்வதால், அதன் நோக்கமும் மாறிவிட்டதாகவே கருதவேண்டியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளின் மீது, தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. அதுவும் ஆளும் கட்சி எம்.பிக்களின் வீடுகளே குறிவைக்கப்படுகின்றன. போராட்டங்களுக்கு உள்ளே, இனந்தெரியாதவர்கள், முகத்தை கறுப்புத் துணியால் மூடிக்கொண்டு, இலக்கத் தகடு அற்ற மோட்டார் சைக்கிள்களில் புகுந்து செல்கின்றனர்; இது ஆபத்தானது.

ஜனாதிபதியின் வாசஸ்தலம் அமைந்திருக்கும் மிரிஹானவில், போராட்டம் நடத்தப்பட்டபோது பஸ்ஸொன்று எரிக்கப்பட்டது. அவசரகாலச் சட்டத்தையும் ஊரடங்குச் சட்டத்தையும் பிறப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், அச்சம்பவத்துக்கு பின்னால், அரசாங்கமே இருக்கிறதென, எதிரணியினர் குற்றஞ்சாட்டினர்.

நாட்டின் நிலைமை தொடர்பில், பாராளுமன்றத்தில் இரண்டு நாள்கள் விவாதம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானோர். ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் பாரிய சக்திகள் இருக்கின்றன. அவை, இளைஞர்களின் உயிர்களை பலியெடுக்க முயற்சிக்கின்றன எனக் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

ஏதோ! பொறி வைக்கப்பட்டுள்ளது. ஆகையால், உரிமைக்கான போராட்டம், உயிரைப் பறிக்கும் போராட்டமாக மாறிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கவேண்டும். பிரச்சினைகள் விளங்கியிருக்கின்றன. ஆகையால், தீர்வுகளை துரிதப்படுத்த வேண்டும்

யுத்த காலத்தில் தமிழர்கள் அனுபவித்த வேதனைகளும் சோதனைகளும் தென்னிலங்கை மக்களுக்குத் தற்போதுதான் கொஞ்சம் புரிந்திருக்கிறது. ஆகையால், தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு, சிங்களவர்களும் ஓரணியில் திரண்டு குரல்கொடுத்து, தீர்த்துவைப்பதன் ஊடாக, நாட்டை முன்னேற்ற முடியுமென்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும், வடக்கில், தனியார் காணிகளை கையகப்படுத்தும் செயல்களை இராணுவம் முன்னெடுகின்றது என குற்றஞ்சாட்டப்படுகின்றது. சூட்சுமான முறையில் காணிகளைக் கையகப்படுத்தும் செயலைக் கைவிடவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எதையாவது இலவசமாகக் கொடுக்கிறார்கள் என்றால், மக்கள் அவசரப்பட்டு, முட்டி மோதிக்கொள்வார்கள். பொருளின் பெறுமதி சிறிதே என்றாலும் ஆக்ரோஷத்துடன் போராடிப் பெற்றுக்கொள்வார்கள்.

ஆனால், சும்மா நேரத்தை வீணடிக்கும் பொழுதில், உசாருடன் வேலை செய்யாமல் இருப்போர் அநேகர். இது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். அவசரப்பட வேண்டிய நேரத்தில் உறங்குவார்கள். விழி திறந்திருக்கும் நேரத்திலும் தொழில் செய்யாத சோம்பேறிகள், சடம் போல வாழ்வார்கள்.

ஒரு வினாடியேயாயினும், அதை வீணடிப்பது, பெரும் இழப்பாகும். ஒரு நோயாளியை உடன் கவனிக்காது விட்டால், உயிரிழப்பு ஏற்படலாம்.

பூமி சும்மா சுற்றுவதில்லை. அதன் நிறை பிரமாண்டம். பூமி தன்னைத்தான் சுற்றுவதுடன் சூரியனையும் சுற்றிவருகின்றது. பூமித்தாய் இப்படியாகப் பாரிய சுமைகளுடன் சுற்றுவதாலேயே, நாங்கள் சொகுசாக வாழ்கின்றோம். அப்படியிருக்க மனிதன் சிறு தேனீகளைப் பார்த்தாவது திருந்த வேண்டாமா?

கையில் கிடைக்கும்போது அதைக் கைப்பற்றாதவன், அது இல்லாதபோது மனம் குமுறுகின்றான். சோம்பலின் முடிவும் இப்படித்தான் அமையும்.

சந்தோஷங்கள் எல்லாமே எங்கள் கடும் முயற்சியாலேயே உருவாகின்றன. இதை உணர்ந்தால் உழைக்கும் திறன் பிறக்கும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### யானைகளால் தென்னை மரங்கள் அழிப்பு



யானைகளால் பயன்தரும் தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலளர் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் பகுதியில் இரவு வேளைகளில் காட்டுயானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை (04) மூன்று காட்டு யானைகள் பெரியகுளம் பகுதியில் மக்கள் குடியிருப்புக்குள் நுழைந்து, பயன்தரும் தென்னை மரங்களை அழித்துள்ளன. காணிகளில் வாழ்வாதாரத்துக்காக வைக்கப்பட்டு, ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலுள்ள தென்னைகளை, யானைகள் முற்றாக அழித்து நாசம் செய்துள்ளதாக, மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

தற்பொழுது கால போக நெற்செய்கை அறுவடை முடிந்து, இரண்டு மாதங்கள் கடந்த நிலையில், குடியிருப்பு பகுதிக்குள் காட்டு யானைகள் வர ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில் யானைகளிடமிருந்து பாதுகாப்புக்காத் தமக்கு யானை வெடியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அழிவடைந்த தென்னை பயிர்களுக்கான நட்டஈட்டைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

–யது பாஸ்கரன்

இன்றைய நெருக்கடி:

# கல்லுளிமங்கன்களுடன் காலம் கழித்தல்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கடந்த பல வாரங்களாக எழுதிவந்த 'ஸ்ரீ லங்கா முதல் சிங்கலே வரை' தொடரைத் தற்காலிகமாக நிறுத்தி, சமகால நெருக்கடிகளின் பல்பரிமாணம் தொடர்பாக, இப்பந்தி அலசுகிறது.

கடந்த ஒருவார காலத்துக்குள், இலங்கையில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவை வரவேற்கப்பட வேண்டிய மாற்றங்கள். இலங்கையின் இன்றைய நெருக்கடியை, வெறுமனே ஒரு பொருளாதாரப் பிரச்சினையாகப் பார்ப்பது, முழுமையான ஒரு பார்வையாகாது. இது, நான்கு நெருக்கடிகளின் கூட்டு விளைவு. முதலாவது, அரசியல் நெருக்கடி; இரண்டாவது, ஆட்சியியல் - நிர்வாக நெருக்கடி; மூன்றாவது, பொருளாதார நெருக்கடி; நான்காவது, சமூக நெருக்கடி.

ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த இந்த நெருக்கடிகள், தனித்தனியாக மிகவும் ஆழமானவை. சுதந்திரத்துக்குப் பிந்தைய பின்கொலனிய தேசக் கட்டுமானத்தோடும் அதன் வளர்ச்சியோடும் நெருக்கமானவை.

இன்று, இலங்கை வேண்டி நிற்பது முற்றுமுழுதான ஒரு கட்டமைப்புசார் மாற்றத்தையாகும். அது சாத்தியப்படாமல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கோ ஏனைய பிரச்சினைகளுக்கோ, தீர்வை எட்ட முடியாது. அடிப்படையிலான கட்டமைப்பு மாற்றம் அவசியமானது என்பதை, இரண்டு உதாரணங்களோடு விளக்கலாம்.

முதலாவது, வீட்டுக்குப் போகச்சொல்லி நாடு தழுவிய எதிர்ப்புகள் நடைபெற்று வருகின்ற நிலையிலும், ஜனாதிபதி பதவிவிலக மறுப்பதற்கு வாய்ப்பாக உள்ளது எது என்று நோக்கினால், இலங்கையில் அரச கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ள முறையாகும்.

மக்கள் கருத்துக்குச் செவிசாய்க்காமல், தொடர்ந்தும் அதிகாரக் கதிரையை இறுகிக் கட்டிப் பிடித்திருக்க முடிகின்றது என்கிறபோதே, அடிப்படை ஜனநாயக விழுமியங்கள் இல்லாமலாகி விட்டன. எனவே, அரச கட்டமைப்பில் அடிப்டையான மாற்றங்கள் தவிர்க்க இயலாதவை.

இரண்டாவது, இந்த நெருக்கடியிலும் பயனற்ற, வெற்றுப் பேச்சுகளைப் பேசும் இடமாகவும் பேச்சன்றிச் செயலல்ல என்பதை உறுதிப்படுத்தும் விதமாகவும் பாராளுமன்றம் செயற்படுகிறது.

ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை, கடந்த சில நாள்களாக பாராளுமன்றத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

இவ்விரண்டின் பின்புலத்திலேயே, அரச கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிப் பேசியாக வேண்டும். அச்சீர்திருத்தங்கள் இன்றி, இலங்கையில் ஏற்படும் எந்தவொரு மாற்றமும் நீண்ட காலத்துக்கு நிலைக்கவியலாது என்பதோடு மக்களுக்கானதாக அரசு இருப்பதை உறுதி செய்யாது.

கொலனித்துவத்துக்குப் பிந்தைய 75 ஆண்டுகளில், தோல்வியுற்றதும் முழுமையற்றதுமான பல அரச கட்டமைப்புச் சீர்திருத்தத் திட்டங்களை, இலங்கை கண்டுள்ளது. இந்த சீர்திருத்த முயற்சிகளில் சில, தெற்காசியாவில் ஒப்பீட்டளவில், சமூக அமைதியுடன் கூடிய ஜனநாயகத்தின் முன்மாதிரி என்ற நற்பெயரை அனுபவித்தபோது மேற்கொள்ளப்பட்டன.

மற்றவை, இலங்கை அரசியல், உள்நாட்டுப் போர் மற்றும் வன்முறையை நோக்கி ஒரு தீர்க்கமான திருப்பத்தை எடுத்த பின்னர் செய்யப்பட்டவை.

இலங்கை சூழலில், அரச கட்டமைப்பு சீர்திருத்தம் என்பது, பிராந்திய சுயாட்சி மூலம் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை இன சமூகங்களுக்கு இடையில், அதிகாரப் பகிர்வுக்கான ஏற்பாடுகளை உருவாக்குவதற்காக அரச கட்டமைப்பை மறுசீரமைப்பதாகும்.

ஆரம்பகால சீர்திருத்த முயற்சிகள் 1958, 1966 இல் முன்னெடுக்கப்பட்டன. இரண்டு சந்தர்ப்பங்களிலும், ஆளும் சிங்கள அரசியல் உயரடுக்கின் தலைவர்கள், தமிழ் அரசியல் உயரடுக்கின் தலைவர்கள் பிராந்திய சுயாட்சிக்கான வரையறுக்கப்பட்ட ஏற்பாடுகளை செயற்படுத்த ஒப்புக்கொண்டனர்.

இனக்கலவரம், உள்நாட்டுப் போராக உருவாவதற்கு முன்னர், இலங்கையின் 'சமாதான காலத்தில்' மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அவை. சிங்கள தேசியவாத தொகுதிகளின் எதிர்ப்புக்கு மத்தியில், இரண்டு முயற்சிகளும் கைவிடப்பட்டன. மற்றவை பின்னர் வந்தன; வன்முறை மற்றும் நீடித்த இன உள்நாட்டுப் போரின் புதிய சூழலில், 1987, 1994-1995, 2000, 2002, 2007-2008, 2015-2016 ஆகியவை சீர்திருத்த தோல்வியின் தொடர்ச்சியான செயற்பாட்டில் முக்கியமான ஆண்டுகள். இந்த வரலாறு, இலங்கையை ஒரு பயனுறுதி வாய்ந்த செயற்றிறன்மிக்க இயங்குநிலை ஜனநாயகமாக உருமாற்றும் செயற்பாடுகள் தொடர்ச்சியாகத் தோல்விகண்டதன் விளைவு என்பதையே நோக்க வேண்டியுள்ளது.

போராக உருமாறிய இனப்பிரச்சினை, அரச கட்டமைப்பு சீர்திருத்தத்தை, அரசியல் ரீதியில் அவசியமாகவும் அதேவேளை சாத்தியமற்றதாகவும் ஆக்கியுள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பாக, இலங்கையில் மேற்கொள்ளப்படும் அனைத்து அரச கட்டமைப்பு சீர்திருத்த முயற்சிகளில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், அவை பகுதி உயரடுக்குகளிடையே ஒருமித்த கருத்தொன்றை அடையவியலாததன் விளைவுகளாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவை மேலே இருந்து அரச கட்டமைப்பு சீர்திருத்தத்துக்கான பயிற்சிகளாக இருந்தன.

இந்தத் தோல்வியடைந்த அரச கட்டமைப்பு சீர்திருத்த முயற்சிகள் அனைத்திலும் பொதிந்துள்ள ஒரு முக்கிய பாடம் என்னவென்றால், இத்திருத்தங்கள் சாத்தியமாவதற்கு உயரடுக்கின் ஒருமித்த கருத்து, பகுதியாக அல்லது முழுமையாக அவசியமானது.

ஆனால், அது போதுமான நிபந்தனை அல்ல. இலங்கையில் இது சம்பந்தமாக, தீர்க்க முடியாத பிரச்சினை என்னவென்றால், அதிகாரப்பகிர்வு அல்லது கூட்டாட்சிப் பாதையில், அரச கட்டமைப்பு சீர்திருத்தங்களுக்கு, கீழிருந்து கோரிக்கை இல்லாததுதான்.

இலங்கையின் ஒற்றையாட்சி மற்றும் மையப்படுத்தப்பட்ட அரசை மாற்றுவதற்கான மக்கள் கோரிக்கை, ஓர் எதிர்ப்புரட்சி அல்லது வலுவான எதிர்ப்பு வடிவில் இதுவரை வரவில்லை. இப்போதைய மக்கள் கோரிக்கைகள், நேரடியாகவும் மறைமுகமாகவும் கோருவது அரச கட்டமைப்பைச் சீர்திருத்துவது பற்றியேயாகும்.

இலங்கை, இன்று ஒரு திருப்புமுனையில் நிற்கிறது. முதலாவதாக, இன மோதல்களுக்கு இனரீதியான தீர்வுகள் இல்லை. இலங்கை போன்ற பல்லின நாட்டில், அனைவருக்குமான தீர்வுகளே அவசியமானவை.

இரண்டாவதாக, இலங்கையின் பன்மைத்துவ கூட்டாட்சி சமூகத்தின் மூன்று முக்கிய இன சமூகங்களானவை - பிராந்திய, உள்ளூர் மற்றும் பிற சிறுபான்மையினருடன் தீவிர ஒத்துழைப்பில் - சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகியோர் அரசியல் ரீதியாக மீண்டும் இணைவது முன்நிபந்தனையாகிறது.

இதுவரை காலம், இன சமூகங்களுக்கு இடையேயான உறவென்பது, ஒரு பலவீனமான கூட்டமைப்பாக இருந்ததோடு, அதன் உறவின் முறிவுக்கு வரலாற்று நிகழ்ச்சி நிரல் காரணமானது. தன்னெழுச்சியான போராட்டங்கள் சமூகங்களிடையே புதிய உறவை முகிழ்த்துள்ளன. இது முன்னேற்றகரமானது. ஜனநாயக அரசியல் உரையாடல் ஒன்றுக்கான வாய்ப்பு உருவாகியுள்ளது. இது சிறுபான்மையினருக்கு ஜனநாயகத்தின் உரிமைகளை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் குறித்துப் பேசுவதற்கான களத்தை மக்களே ஏற்படுத்தியுள்ளார்கள். இதற்கிடையில், இலங்கை அரசின் சிதைவுப் பாதையைத் தடுத்து நிறுத்த, அரசின் அமைப்புகளை மீண்டும் உருவாக்குவது வரலாற்றுத் தேவையாக மாறியுள்ளது.

பொறுப்பற்ற ஜனாதிபதியுடனும் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் காலந்தள்ளும் துர்ப்பாக்கிய நிலைக்கு, இலங்கையர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். கடந்த ஒருவார நிகழ்வுகள், சில தெளிவான விடயங்களை எமக்குக் காட்டியுள்ளன. இந்த நெருக்கடியிலிருந்து, இலங்கையர்கள் கற்றுக்கொண்டுள்ள பாடங்களைச் சுருக்கமாக இவ்வாறு வகைப்படுத்தலாம்.

அ. இனத்துவ தேசியவாதத்தால் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க முடியாது.

ஆ. வல்லுநர் அரசியல் (Technocratic politics) தீர்வு அல்ல.

இ. பொது நிர்வாகத்தை இராணுவமயமாக்கி உருவாக்கப்பட்ட 'ஒழுக்கம்' என்ற தோற்ற மயக்கம், மோசமாக தோல்வியடைந்துள்ளது.

ஈ. வலுவான தலைவரால், நாட்டை வளமான நிலைக்கு கொண்டு செல்ல முடியாது.

உ. ஜனரஞ்சக அரசியல் எப்போதும் பொருளாதார வளர்ச்சியை குழிபறிக்கும்.

இன்று மக்கள் பொருளாதாரப் பிரச்சினைகளின் விளைவால் வீதிக்கு வந்துள்ளார்கள். இந்தப் பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், நான்கு அடிப்படைக் காரணிகள் மறைந்துள்ளன.

1. இலங்கையானது ஜனநாயகத்தின் சிதைவை மையப்படுத்தியுள்ளது.

2. பொது நிர்வாகத்தின் இராணுவமயமாக்கல் அடிப்படை, அரசாட்சியைக் கேலிக்கூத்தாக்கியுள்ளது.

3. கொள்கைகள் தோல்வி அடைவதன் விளைவுகள் குறித்து, உணர்வற்ற ஓர் அரசாங்கம்

4. ஏழைகள், பின்தங்கிய மக்களின் பொருளாதார துன்பங்களை எளிதாக்குவதற்கு, பயனுள்ள அரசாங்க தலையீடுகளை செய்ய இயலாத நிலைமை.

இவற்றின் அடிப்படையிலேயே முன்சொன்ன நான்கு நெருக்கடிளை இலங்கை எதிர்நோக்குகிறது. இலங்கை அவ்வப்போது பிச்சைக் கிண்ணத்துடன் நாடு விட்டு நாடு செல்வதைத் தவிர்க்கவேண்டுமாயின், அரசியல், பொருளாதாரக் கட்டமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும், தன்னை மறுபரிசீலனை செய்வதற்கும் சற்று நிதானித்து கடுமையாக சிந்திக்க வேண்டும்.

மக்கள் அதிகாரத்தை நோக்கிய இப்போதைய பயணம், இறுதி பயணமாகவும் இருக்கவியலும். விழிப்பாகவும் தெளிவாகவும் இல்லாது போயின், கல்லுளிமங்கர்களோடு ஆயுள்முழுதும் காலம் கழிக்க நேரும். அதற்குப் பயனான பாசிசம் என்ற கொடுந்தண்டனை எம்மை வந்து சேரும்.

கர்நாடகா

# கர்நாடக மாணவிக்கு அல்கொய்தா ஆதரவு

கர்நாடகத்தில் ஹிஜாப் போராட்டத்தில் துணிச்சலாக அல்லாஹு அக்பர் கோஷமிட்ட முஸ்லிம் மாணவி முஸ்கானுக்கு அல்கொய்தா தலைவர் 'அய்மான் அல் ஜாவ்வரி' 9 நிமிடங்கள் வீடியோ செய்தி மூலம் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அல்கொய்தாவோடு தங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்றும், தங்களை அமைதியாக வாழ விடுமாறும் முஸ்கானின் தந்தை வேண்டுகோள் விடுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

மேலும் தமது மகளின் படம் தீவிரவாதிகளின் சுவரொட்டிகளில் இடம் பெறுவதை தாம் சிறிதும் விரும்பவில்லை எனவும், அல்கொய்தா இப்பிரச்சினையைத் தூண்டி மோதல்களை அதிகப்படுத்த முயற்சிப்பதாகவும் முஸ்கானின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

உக்ரேன்

# உக்ரேனுடன் கைகோர்த்த இந்தியா

உக்ரேன் மீதான ரஷ்யப் படைகளின் தாக்குதல் 40 நாள்களைக் கடந்தும் நீடித்து வருகின்றது.
குறிப்பாக கடந்த சில நாள்களுக்கு முன்னர் உக்ரேனின் புச்சா நகரில் ரஷ்யப் படையினர் இனப் படுகொலையில் ஈடுபட்டதாகவும் இதன்போது சுமார் 400க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அப்பகுதியில் கொன்று புதைக்கப்பட்டனர் எனவும், நூற்றுக்கணக்கான பிணங்கள் வீதிகளில் சிதறிக் காணப்பட்டன எனவும் உக்ரேன் குற்றம் சாட்டியதோடு, இது குறித்த புகைப்படங்களையும் வெளியிட்டது.



குறித்த புகைப்படங்கள் சர்வதேச ரீதியில் பெரும் அதிர்வலைகளை எழுப்பியிருந்ததோடு, உலக நாடுகள் பலவும் ரஷ்யா மீது தமது கண்டனங்களைப் பதிவுசெய்தன.
இந்நிலையில் இது குறித்து ஐ.நா பாதுகாப்பு சபை கூட்டத்தில் இந்திய சார்பில் உரை நிகழ்த்திய நிரந்தர பிரதிநிதி டி.எஸ்.திருமூர்த்தி தெரிவித்திருப்பதாவது:

உக்ரேனில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்துள்ளது. அங்கு மனிதாபிமான நிலைகளும் மோசமடைந்துள்ளன.

புச்சா நகரில் பொதுமக்கள் படுகொலைகள் பற்றிய சமீபத்திய அறிக்கைகள் ஆழ்ந்த கவலையளிக்கின்றன. இக் கொலைகளை நாங்கள் (இந்தியா) சந்தேகத்திற்கு இடமின்றி கண்டிக்கிறோம். சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் ஆதரிக்கிறோம்.

இந்தியா, உக்ரேனுக்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் மருந்துகள் மற்றும் அத்தியாவசிய நிவாரணப் பொருட்களை அனுப்புகிறது. வரவிருக்கும் நாள்களில் உக்ரேனுக்கு இன்னும் அதிகமான மருத்துவப் பொருட்களை வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மனிதாபிமான நடவடிக்கை, நடுநிலைமை, பாரபட்சமற்ற தன்மை உள்ளிட்ட நடவடிக்கைகள் ஒருபோதும் அரசியலாக்கப்படக்கூடாது. சர்வதேச சமூகமும் தொடர்ந்து மனிதாபிமான தேவைகளுக்கு சாதகமாக பதிலளிக்கும் என்று நம்புகிறோம்.

மனிதாபிமானமான முறையில் அத்தியாவசிய பொருட்களை வழங்கப்படுவதற்கு, பாதுகாப்பான பாதை அமைக்கும் உத்தரவாதங்களை வலியுறுத்தும் கோரிகைக்களை நாங்கள் ஆதரிக்கிறோம்" இவ்வாறு தெரிவித்தார்.

கரூர்

# தலைக்கவசமின்றி ஒன்றுமேமில்லை

கரூரில் வரும் 18 ஆம் திகதி முதல் அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், டாஸ்மாக் கடைகள், பெட்ரோல் பங்குகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் ஹெல்மெட் (தலைக்கவசம்) அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கரூர் மாவட்ட ஆட்சியர் பிரபுசங்கர் வெளியிடப்பட்ட அறிக்கையில்; 'தலைக்கவசம் அணியாமல் வரும் இருசக்கர வாகன ஓட்டிகள் எவருக்கும் எந்த ஒரு சேவையும் வழங்கப்படமாட்டாது' என எச்சரிக்கப்பட்டுள்ளது.

# நெற்றியில் திலகமிட்டதால்

## மாணவிகளை அடித்து துன்புறுத்திய ஆசிரியர்

ஜம்மு காஷ்மீரில் பாடசாலைக்கு திலகம் அணிந்து வந்த மாணவிகளை ஆசிரியர் தாக்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் ரஜோரி மாவட்டம் ஹடுரீன் பகுதியில் உள்ள அரச பாடசாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இடம்பெற்ற விசாரணையில், குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் நான்கு மாணவிகள் நெற்றியில் திலகமிட்டவாறு பாடசாலைக்கு வந்துள்ளதாகவும், இதன்போது மத அடையாளத்தை வெளிப்படுத்தும் விதமாக திலகம் இட்டிருந்ததற்காக அவர்களை அப்பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியர் ஒருவர் அடித்ததாகவும், கொச்சையான வார்த்தைகளால் திட்டியதாகவும் கூறப்படுகின்றது.


இந்நிலையில் இச்சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட மாணவிகள் தமது பெற்றோருக்கு தெரியப்படுத்தியதையடுத்து அவர்கள் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"திலகம் அணிந்தது மற்றும் நிகாப் (தலையில் முக்காடு) அணிந்து வந்ததற்கு எனது மகள் மற்றும் ஷகூரின் மகள் (தாக்கப்பட்ட மற்றொரு மாணவி) வகுப்பறையில் இன்று தாக்குதலுக்கு ஆளானதை போன்று நாளை மற்றொரு குழந்தையும் தாக்கப்படலாம். மாவட்ட நிர்வாகம் இந்த விவகாரம் குறித்து விரிவான விசாரணை நடத்த வேண்டும்" என மாணவியின் தந்தை அங்ரெஸ் சிங் தெரிவித்தார்.

பஞ்சாப்

# அம்மா தூய்மை பணியாளர்;

## மகன் சிறப்பு விருந்தினர்



பஞ்சாப்பில் ஆம் ஆத்மி கட்சி சார்பில் போட்டியிட்டு சட்ட மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட லாப் சிங் உகோக் என்பவர், தனது தாய் தூய்மை பணியாளராக பணிபுரியும் அதே பாடசாலைக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட சம்பவம் பலரையும் நெகிழ்ச்சியடைய வைத்துள்ளது.

சமீபத்தில் நடந்து முடிந்த பஞ்சாப் மாநில தேர்தலில் பெரும்பான்மையான இடங்களில் வெற்றிபெற்று முதன்முறை ஆட்சியை பிடித்திருக்கிறது ஆம் ஆத்மி கட்சி.

குறிப்பாக, மொத்தமாக உள்ள 117 தொகுதிகளில் 92 தொகுதிகளை கைப்பற்றி ஆம் ஆத்மி புதிய சாதனை படைத்தது.

இக்கட்சியின் சார்பில் பாதவுர் தொகுதியில் போட்டியிட்டவர் லாப் சிங் உகோக் 37,550 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

மேலும் இவரது தாயாரான பல்தேவ் கவுர் என்பவர் அருகில் உள்ள அரச பாடசாலையில் சுகாதாரப் பணியாளராக கடந்த 25 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார்.

இதனையடுத்து தேர்தலில் தனது மகன் வெற்றி பெற்றாலும் தூய்மை பணியை தொடர்ந்து மேற்கொள்ள இருப்பதாக தெரிவித்த பல்தேவ் கவுர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "எனது மகன் தேர்தலில் வெற்றிபெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. நாங்கள் எப்போதும் கடுமையாக உழைக்கக்கூடியவர்கள். என்னுடைய மகன் எம்எல்ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் பாடசாலையில் எனது பணியை தொடர்ந்து செய்வேன்" எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தாய் தூய்மை பணியாளராக இருக்கும் அதே பாடசாலைக்கு சிறப்பு விருந்தினராக மகன் அழைக்கப்பட்டிருந்த சம்பவம், அப்பகுதி மக்களிடையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புதுச்சேரி

# திருடிய அரச ஊழியர் கைது

புதுச்சேரியில், சாவியுடன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை அரச ஊழியர் ஒருவர் திருடிச் சென்ற சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அப்பகுதியில் பீட்சா கடை நடத்தி வரும் சக்திவேல் என்பவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ தினத்தன்று தனது மோட்டார் சைக்கிளை கடைக்கு வெளியே நிறுத்திவிட்டு சென்றதாகவும் திரும்பி வந்து பார்த்த போது வாகனம் திருடப்பட்டிருந்ததாகவும் இந்நிலையில், அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி காட்சிகளை ஆய்வு செய்ததில், முதியவர் ஒருவர் நோட்டமிட்டப்படி சாவியுடன் நின்ற பைக்கை திருடிச்சென்றது பதிவாகியுள்ளது. இதுகுறித்து அளிக்கப்பட்ட புகாரில் சி.சி.டி.வி காட்சிகளை கொண்டு அரச ஊழியர் ஸ்டாலினை கைது செய்த பொலிஸார், திருடப்பட்ட மோட்டார் சைக்கிளைப் பறிமுதல் செய்துள்ளனர்.

# வலுத் தேவையை நிவர்த்தி செய்யும் வாய்ப்புகள் பற்றிய கலந்துரையாடல்



இலங்கையில் அதிகரித்துச் செல்லும் வலுத் தேவையை நிவர்த்தி செய்வதற்கு புதுப்பிக்கத்த வலுப் பிறப்பாக்கல் மற்றும் விநியோகம் என்பவற்றை மேம்படுத்தக்கூடிய வழிமுறைகளைப் பற்றி கலந்தாலோசிப்பதற்கான கருத்தரங்கு ஒன்றை கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம், Western Norway University of Applied Sciences (HVL)மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. 'தூய மற்றும் நிலைபேறான வலு யுகத்தை நோக்கி: இலங்கையில் நிலவும் வலுத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான வாய்ப்புகள்' ('Towards a clean and sustainable energy era: Opportunities to meet the energy demand in Sri Lanka') எனும் தலைப்பில் கோல் ஃபேஸ் ஹோட்டலில் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் தனியார்துறை, கல்விமான்கள், நன்கொடை வழங்கும் சமூகம், சம்பந்தப்பட்ட முகவர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நோர்வே தூதுவர் டீரன யுரன்லி எஸ்கடேல் கருத்துத் தெரிவிக்கையில், 2050 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க மின்வலு பிறப்பாக்கல் இலக்குகளை எய்துவது தொடர்பில் இலங்கை உடன்பட்டுள்ளது. இந்த இலக்கை நோக்கி நாடு முன்னேறும் நிலையில், பொருத்தமான கொள்கைச் சூழல், புத்தாக்கமான நிதிக் கட்டமைப்புகளை கட்டியெழுப்புதல், துறையினுள் அதிக முதலீடுகளை கவர்வதற்கு குறிப்பாக தனியார் துறையிலிருந்து புதிய செயன்முறைகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றை ஏற்படுத்துவது முக்கியமானதாகும். ஆய்வுகள் முன்னெடுப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் முக்கியமாக சகல பங்காளர்களுடனும் கலந்தாலோசனைகள் மற்றும் கைகோர்ப்புகள் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். நோர்வே அதிகளவு புதுப்பிக்கத்தக்க வலுவை பயன்படுத்தும் நாடாக அமைந்திருப்பதுடன், இலங்கைக்கு அதன் புதுப்பிக்கத்தக்க வலு இலக்குகளை எய்துவதற்கு ஆதரவளிப்பதற்கு தன்னை அர்ப்பணிப்பத்துள்ளது" எனக் குறிப்பிட்டார்.

இலங்கையால் தூய வலுவுக்கு மாற்றமடைவது மற்றும் எவ்வாறு நோர்வே நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களால் பங்களிப்பு வழங்க முடியும் என்பது பற்றி HVL இன் பேராசிரியர் தயாளன் வேலாயுதப்பிள்ளை குறிப்பிடுகையில், நோர்வேயைச் சேர்ந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் ஆகியன இலங்கையின் அமைப்புகளுடன் இணைந்து இலங்கையில் நிலவும் வலுத் தேவையை நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். கிளிநொச்சியில் அமைந்துள்ள நோர்வே நிதி உதவியில் இயங்கும் மிதக்கும் சூரியப் படல் தொகுதி அதற்கு உதாரணமாகும்" என்றார்.

நிலைபேறாண்மை மற்றும் தூய வலு தொடர்பான நிபுணரான கலாநிதி விதுர ரலபனாவ கருத்துத் தெரிவிக்கையில், "இயற்கைக் கட்டமைப்புகளில் காலநிலை என்பது பாரிய அனர்த்தத்தை ஏற்படுத்தும் நிலையில், துரித கதியில் காபனகற்றல் என்பது எமது வாழ்நாளில் மாபெரும் சவாலாக அமைந்துள்ளது. எதிர்காலத்துக்காக எமது வலுக் கட்டமைப்புகளை மீளமைத்துக் கொள்வதற்கான வாய்ப்பையும் இது வழங்கும். பெருமளவு புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களுடன், இலங்கையால் இந்த நடவடிக்கைகளில் முன்னிலையில் திகழக்கூடியதாக இருக்கும்." என்றார்.

*Current Solar AS* இன் பிரதம நிறைவேற்று அதிகாரி இங்கே விகேஸ்தால், இலங்கையில் சூரிய சக்தியை பயன்படுத்துவதற்கு காணப்படும் பெருமளவு வாய்ப்புகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

*Greenstat AS* இன் ஸ்ட்ருலே பெடெர்சன் குறிப்பிடுகையில், இலங்கையில் *hydrogen* தீர்வுகளை நிறுவுவதற்கு காணப்படும் வாய்ப்புகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். இலங்கையில் *green hydrogen* பிறப்பிப்பதற்கான மாதிரித் திட்டத்தை முன்னெடுப்பதற்காக, 2022 மார்ச் மாதம் இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையுடன் *Greenstat* உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது.

இந்தக் கருத்தரங்கில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க, இலங்கை நிலைபேறான வலு அதிகாரசபையின் தவிசாளர் ரஞ்சித் சேபால, லங்கா மின்சார கம்பனியின் பொது முகாமையாளர் கலாநிதி நரேந்திர டி சில்வா (LECO) ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

# டோக்கியோ சீமெந்தின் வருடாந்த விநியோகத்தர் மாநாடு

2021ஆம் ஆண்டில் சிறப்பாக செயலாற்றியிருந்த தனது விற்பனையாளர்களை டோக்கியோ சீமெந்து குழுமம் கௌரவித்திருந்தது. இந்த நிகழ்வு அண்மையில் சினமன் பெந்தோட்ட பீச் ஹோட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) பிஎல்சியின் நிர்வாக அணியினர் கலந்து கொண்டனர். இதில் முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.ஆர்.ஞானம், குழும பிரதம செயற்பாட்டு அதிகாரி எம் தயானந்தன், ஆலோசனை பணிப்பாளர் கிறிஸ்டோபர் பெர்னான்டெர், குழும சந்தைப்படுத்தல் முகாமையாளர் தஷந்த உடவத்த ஆகியோர் கலந்து கொண்டனர். நாடு முழுவதையும் சேர்ந்த டோக்கியோ சீமெந்து விற்பனையாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டதுடன், கடந்த ஆண்டில் அவர்களின் சிறப்பாக செயற்பாடுகளுக்கு கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

2021 ஆம் ஆண்டில் சிறந்த பங்களிப்பை வழங்கியிருந்த விற்பனை பங்காளர்களின் ஆதரவுக்கும் இந்நிகழ்வில் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. குறிப்பாக நெருக்கடி நிறைந்த சந்தைச் சூழலில், பல்வேறு வியாபார தடங்கல்களுக்கு மத்தியிலும் நிறுவனத்தின் விற்பனைச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அயராது தமது பங்களிப்பை வழங்கியிருந்தவர்களின்



அர்ப்பணிப்பான செயற்பாடுகள் இந்நிகழ்வின் போது பாராட்டுதலைப் பெற்றிருந்தது. நான்கு தசாப்த காலமாக டோக்கியோ சீமெந்து குழுமம் கட்டியெழுப்பி நாட்டின் முன்னணி சீமெந்து உற்பத்தியாளராக திகழும் உறுதியான பிணைப்புகளுக்கு மேலும் வலுச் சேர்த்திடும் வகையில் செயலாற்றியிருந்த ஒவ்வொரு விற்பனையாளரின் பங்களிப்புக்கும் நிர்வாகம் நன்றி தெரிவித்திருந்தது. நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எஸ். ஆர்.ஞானம் வெற்றியாளர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்திருந்ததுடன், நிறுவனத்தை வளர்ச்சிப் பாதையில் வெற்றிகரமாக வழிநடத்த ஆற்றியிருந்த பங்களிப்புக்கும் நன்றி தெரிவித்திருந்தார். திருகோணமலையில் அமைந்துள்ள உற்பத்திப் பகுதியில் மேலும் 1 மில்லியன் மெட்ரிக் தொன் சீமெந்து உற்பத்தி விரிவாக்கத்தை மேற்கொள்வதற்கும், கொழும்பு துறைமுக வளாகத்தில் மொத்த சீமெந்து செயற்பாடுகளின் கொள்ளளவை 1 மில்லியன் மெட்ரிக் தொன்னால் அதிகரிக்கச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட அடிக்கல் நாட்டல் பற்றிக் குறிப்பிடுகையில், வாடிக்கையாளர்களின் எதிர்காலத் தேவை அதிகரிப்புக்கு ஏற்ற வகையில் டோக்கியோ சீமெந்து தனது தயார்ப்படுத்தலை வெளிப்படுத்தியுள்ளது என்றார்.

நான்கு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக இலங்கையின் முன்னேற்றத்துக்கு சிறந்த தயாரிப்புகளை விநியோகிப்பதில் முன்னோடியாகத் திகழும் டோக்கியோ சீமெந்து குழுமம், உயர் தரம் வாய்ந்த சீமெந்து, கொங்கிறீற் மற்றும் சீமெந்து சார் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்கள் போன்றவற்றின் நம்பிக்கையை வென்ற விநியோகத்தராகத் திகழ்கின்றது. நாட்டின் மாபெரும் சீமெந்து உற்பத்தியாளர் எனும் வகையில், தேசிய பொருளாதாரத்துக்கு உள்நாட்டில் பெறுமதி சேர்ப்பதனூடாக பெறுமதி சேர்ப்பதில் கவனம் செலுத்துகின்றது. தேசத்தைக் கட்டியெழுப்புவதில் முன்னோடியான பங்காளராக டோக்கியோ சீமெந்து குழுமம் தனது நிலையை மேலும் உறுதி செய்துள்ளது.

ஐ.பி.எல்:

# மும்பையை வீழ்த்திய கொல்கத்தா

இந்தியன் பிரீமியர் லீக் தொடரில், பூனேயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தாவின் அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர், மும்பையை முதலில் துடுப்பெடுப்பாடப் பணித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை, தடுமாறிய அணித்தலைவர் றோஹித் ஷர்மாவை உமேஷ் யாதவ்விடம் பறிகொடுத்தது. அடுத்து வந்த டெவால்ட் பிரெவிஸ் வேகமாகத் துடுப்பெடுத்தாடியபோதும், 29 (19) ஓட்டங்களுடன் வருண் சக்கரவர்த்தியிடம் வீழ்ந்ததோடு, சிறிது நேரத்தில் தடுமாறிக் கொண்டிருந்த இஷன் கிஷன், பற் கமின்ஸிடம் வீழ்ந்தார்.

பின்னர் வந்த சூரியகுமார் யாதவ்வின் 52 (36), திலக் வர்மாவின் ஆட்டமிழக்காத 38 (27), கெரான் பொலார்ட்டின் ஆட்டமிழக்காத 22 (05) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 161 ஓட்டங்களை மும்பை பெற்றது. பந்துவீச்சில், உமேஷ் யாதவ் 4-0-25-1, றஸிக் சலாம் 3-0-18-0, சுனில் நரைன் 4-0-26-0, வருண் சக்கரவர்த்தி 4-0-32-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.



பதிலுக்கு, 162 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, குறிப்பிட்ட இடைவெளிகளில் அஜின்கியா ரஹானே, ஷ்ரேயாஸ் ஐயர், சாம் பில்லிங்ஸ், நிதிஷ் ரானா, அன்ட்ரே ரஸலை தைமல் மில்ஸ் (2), டேனியல் சாம்ஸ், முருகன் அஷ்வினிடம் (2) இழந்து இக்கட்டான நிலையில் இருந்தது.

இந்நிலையில், பற் கமின்ஸின் அதிரடியான ஆட்டமிழக்காத 56 (15), நிலைத்து நின்ற வெங்கடேஷ் ஐயரின் ஆட்டமிழக்காத 50 (41) ஓட்டங்களோடு 16 ஓவர்களிலேயே வெற்றியிலக்கை கொல்கத்தா அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பற் கமின்ஸ் தெரிவானார்.

மும்பையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் கிங்ஸும், குஜராத் லயன்ஸும் மோதவுள்ளன.



சம்பியன்ஸ் லீக்:

# செல்சியை வீழ்த்திய றியல் மட்றிட்

## வில்லாறியலிடம் தோற்ற பயேர்ண் மியூனிச்

சம்பியன்ஸ் லீக் தொடரில், நடப்புச் சம்பியன்களான செல்சியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான முதலாவது சுற்று காலிறுதிப் போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட் வென்றது.

றியல் சார்பாகப் பெறப்பட்ட மூன்று கோல்களையும் கரிம் பென்ஸீமா பெற்றதோடு, இங்கிலாந்து பிரீமியர் லீக் கழகமான செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை கை ஹவேர்ட்ஸ் பெற்றிருந்தார்.

இந்நிலையில், இன்னொரு ஸ்பானிய லா லிகா கழகமான வில்லாறியலுடனான முதலாவது சுற்று காலிறுதிப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் தோற்றது. வில்லாறியல் சார்பாகப் பெறப்பட்ட கோலை அர்நௌட் டன்ஜுமா பெற்றிருந்தார்.

# புத்தளத்தில் பாரம்பரிய விளையாட்டு போட்டிகள்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் ரிக்லா விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த மாட்டு வண்டில் போட்டிகளின் இறுதிப் போட்டி, புத்தளம் இஜ்திமா மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அரை கரத்தை போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே ஏ.ஆர்.எம். இஸ்கார், ஏ.எப்.எம். ரியாஸ், ஏ.டபில்யூ.ஏ. வாரிஸ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

ரேஸ் கரத்தை போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே ஏ.டபில்யூ.ஏ. வாரிஸ், எம்.யூ.எம். இஸ்மி, ஏ.ஆர்.எம். இஸ்கார் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். திறந்த போட்டியில் முதலாமிடத்தை எம்.யூ.எம். இஸ்மியும், இரண்டாமிடத்தை ஏ.ஆர்.எம். இஸ்காரும், மூன்றாமிடத்தை அமித்தும் பெற்றுக் கொண்டனர்.



இங்கிலாந்து பிரீமியர் லீக்:

# பேர்ண்லியிடம் தோற்ற எவெர்ற்றன்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், பேர்ண்லியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோல்வியடைந்தது.

எவெர்ற்றன் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் றிஷலிஷன் பெற்றதோடு, பேர்ண்லி சார்பாக, நாதன் கொலின்ஸ், ஜே றொட்றிகஸ், மக்ஸ் கொர்னெட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 73 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்கள் மன்செஸ்டர் சிற்றி காணப்படுகின்றது. 72 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லிவர்பூலும், ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள செல்சி 59 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும், 54 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரும் காணப்படுகின்றன.



# அம்பாறை மாவட்ட பூப்பந்தாட்டத் தொடரில் சம்பியனான நிந்தவூர்

■ நூருல் ஹுதா உமர்

அம்பாறை மாவட்ட பூப்பந்தாட்டத் தொடரில் நிந்தவூர் அணி சம்பியனானது.

அம்பாறை மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகத்துக்குட்பட்ட அணிகள் பங்குபற்றிய இத்தொடரின் இறுதிப் போட்டியல் கல்முனை அணியை வென்றே நிந்தவூர் சம்பியனானது.



உக்ரேன்

# புட்டினின் மகள்களை குறிவைக்கும் அமெரிக்கா

உக்ரேன் மீது ரஷ்யா 40 நாட்களுக்கும் மோலாகத் தொடர் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், ரஷ்யா மீது அமெரிக்கா, ஜி 7 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை புதிய தடைகளை அறிவித்துள்ளன.


குறிப்பாக ரஷ்யாவின் மிகப்பெரிய நிதி நிறுவனமான 'ஸ்பர் பேங்க்', ரஷ்யாவின் மிகப்பெரிய தனியார் வங்கி 'ஆல்பா பேங்க்' ஆகியவற்றின் மீதும் தடைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனால் ரஷ்யாவில் புதிய முதலீடுகள் நிறுத்தப்படும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ரஷ்ய ஜனாதிபதி விலாடிமிர் புடினின் மகள்களான மரியா புதினா, மற்றும் கேட்டரினா டிக்கோனோவா ஆகியோரைக் குறிவைத்துப் புதிய பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ரஷ்ய பிரதமர் மிகைல் மிசுஷ்டின், வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவின் மனைவி, குழந்தைகள், முன்னாள் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வடேவ் உள்ளிட்ட பாதுகாப்பு சபை உறுப்பினர்களும் அமெரிக்காவின் தடை பட்டியலில் இடம்பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


© Eastnews/imago/Mikhail Klimentyev/SPUTNIK/AFP/Dmitry Feoktistov/TASS/picture allian



ஜப்பான்

# இதற்கும் ரோபோவா?

ஜப்பானில் வாழைப்பழத்தை 3 நிமிடங்களில் உரிக்கும் ரோபோவொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த ரோபோவானது மனிதர்களைப் போன்று தனது இரு இயந்திரக் கரங்களாலும் வாழைப்பழத்தோளை உரிப்பதாகவும், இதனை மேற்கொள்ள அதற்கு 13 மணிநேரம் பயிற்சி அளிக்கப்பட்டதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ் ரோபோவானது தற்போது சோதனைக் கட்டத்தில் இருப்பதாகவும், இது விற்பனைக்கு வரும்போது உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு மிகவும் பேருதவியாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

டுபாய்

போதைப் பொருள் வைத்திருந்த

# பெண்ணுக்கு மரண தண்டனை

டுபாயில் போதை பொருள் வைத்திருந்த குற்றச் சாட்டில் இஸ்ரேலைச் சேர்ந்த `பீடா கீவான்` என்ற பெண்ணுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புகைப்படக் கலைஞரான பீடா கீவான் வேலை நிமிர்த்தமாக டுபாய் சென்ற போதே, இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தங்கியிருந்த வீட்டை பொலிஸார் சோதனையிட்ட போது, அங்கு 500 கிராம் அளவிலான கொக்கைன் போதைப்பொருள் கண்டெடுக்கப்பட்டதாகவும், இதனையடுத்து அவர் மீது வழக்குப்பதிவு செய்து மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் இதுதொடர்பாக அவர் மேல்முறையீட்டு மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து "டுபாயில் போதைப்பொருள் தொடர்பான வழக்குகளுக்கு கடும் தண்டனை விதிக்கப்படும் என்பதை வெளிநாட்டினர் புரிந்து கொள்ள வேண்டும்" என அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது,

உக்ரேன்

# அதிர்வலைகளை ஏற்படுத்திய புகைப்படம்

உக்ரேனின் கீவ் நகரில் மனிதாபிமான உதவிகள் பெறுவதற்காக மக்கள் நீண்ட தூரம் வரிசையில் நிற்கும் ட்ரோன் காட்சிகள் வெளியாகி உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நகரில் ரஷ்யாவின் தாக்குதல் நடைபெறுவதற்கு முன் நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வந்தனர் எனவும் ஆனால் தற்போது அந் நகரம் முற்றிலுமாக சூறையாடப்பட்டுக் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் அங்கு வசிக்கும் மக்கள் உணவு, இருப்பிடம் குடிநீர் போன்ற எவ்வித அடிப்படை வசதியும் இல்லாமல் சிரமப்படுவதாகவும் கூறப்படுகின்றது.



இந்நிலையில் அந்நகரிலிருந்து வாகனங்கள் மூலம் வெளியேறும் வழிகள் முற்றிலும் துண்டிக்கப்பட்டு இருப்பதால் நடந்து சென்றால் மட்டுமே நகரில் இருந்து வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக உக்ரேனின் துணை பிரதமர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சொக்லேட்டில் நோய்க் கிருமிகள்;

## 60க்கும் மேற்பட்ட குழந்தைகள் பாதிப்பு

'சப்ரைஸ் எக்ஸ்' (Kinder Surprise) எனப்படும் சொக்லேட் வகையை அதிகளவில் விரும்பி உண்பதாகக் கூறப்படுகின்றது.

Ferrero எனப்படும் பிரபல சொக்லேட்டுகள் தயாரிக்கும் நிறுவனமானது 'தங்களுடைய சொக்லேட்களில் சால்மோனெல்லா எனும் நோய்க் கிருமி பரவி இருப்பதாகவும் எனவே அதனை யாரும் உண்ண வேண்டாம் உடனடியாக திருப்பி கொடுத்துவிடுங்கள்" எனவும் தங்கள் வாடிக்கையாளர்களை கேட்டுக்கொண்டுள்ளது.





இந்த சொக்லேட்டுகள் ஜேர்மெனி, பெல்ஜியம், பிரான்ஸ், பிரித்தானியா உட்பட பல நாடுகளில் விற்பனை செய்யப்படு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# 'கூகுள் மெப்'அதிரடி

## மகிழ்ச்சியில் பயணாளர்கள்

கூகுள் நிறுவனத்தின் தயாரிப்புகளில் மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் அம்சங்களில் கூகுள் மெப் (Google Map) சேவையும் அடங்கும்.



இச்சேவை மூலம் எமக்கு தெரியாத அல்லது அதிக பரிச்சயம் இல்லாத இடங்களுக்கு எம்மால் செல்ல முடிவதோடு, போக்குவரத்தையும் இலகுவாக மேற்கொள்ள முடிகின்றது.

இதன் காரணமாக உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் கூகுள் மெப்பினை பயன்படுத்திவருகின்றனர்.

இந்நிலையில் தனது பயனர்களுக்காக, தமது சேவைகளை அவ்வப்போது புதுப்பித்து வரும் கூகுள் நிறுவனமானது தற்போது கூகுள் மெப்பில் புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் கூகுள் மெப்பில் நீங்கள் தேடும் வழிகளில் இருக்கும் டோல்கேட் கட்டணங்களை(அதிவேக நெடுஞ்சாலைக் கட்டணங்கள்) தெரிந்துகொள்ளும் வசதியை அளிக்கவுள்ளதாகவும், அவ்வாறு நாம் கட்டணம் செலுத்த வில்லை என்றால் அதற்குப் பதிலாக மாற்று வழியைக் காட்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் அம்சமானது அண்ட்ரொய்ட் மற்றும் iOS சாதனங்களில் இம் மாதத்திற்குள் வெளியிடப்படும் எனவும் ஆரம்பத்தில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு இச் சேவை அளிக்கப்படும் எனவும், விரைவில் பல நாடுகளுக்கு சேவை விரிவுபடுத்தப்படும் எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 08 ஏப்ரல் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.